விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 24 வியாழக்கிழமை (09.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 202

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# கட்சியை பறிப்பதற்கு தயாராகும் மகிந்த அணி



## ஜனாதிபதியிடம் இருந்து

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட மேற்கொண்டு வரும் முயற்சி தோல்வியடைந்தால், மகிந்த அணியினர் மாற்று நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## நிபந்தனைகள் எவையும் மகிந்தவுக்கு விதிக்கவில்லை

### ஐ.ம.சுதந்திர முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும், நிபந்தனைகள் ஏதும் விதிக்கப்படவில்லை என்று அந்த முன்னணி கூறுகிறது.

ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட ஐ.ம.சுதந்திர முன்னணி சார்பில் முன்னாள் ஜனாதிபதிக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலும், சில நிபந்தனைகளும் விதிக்கப்

24ஆம் பக்கம் பார்க்க....

## 'ஜனாதிபதி மைத்திரிக்கு அழுத்தம் கொடுத்தது றோ'

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக வேட்புரிமை வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தம் கொடுத்த சக்தி தொடர்பான தகவல்கள் வெளியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாம் விரும்பி மகிந்தவுக்கு வேட்புரிமையை வழங்கியிருப்பார் என்பது சந்தேகத்திற்குரியது.

ஜனாதிபதி பதவிக்கு தான் வருவதற்கு உதவிய சந்திரிகா, ரணில் விக்ரமசிங்க தரப்பும், சோபித தேரர் உட்பட வெகு ஜன அமைப்புகளும் மக்கள் விடுதலை முன்னணியும் மகிந்த ராஜபக்ஷவை இணைத்துக் கொள்வது தொடர்பில் கடும் எதிர்ப்புகளை வெளியிட்டு வந்தன.

எனினும் இந்த அழுத்தங்களை விட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மகிந்தவுக்கு மீண்டும் வாய்ப்பளிக்குமாறு கொடுக்கப்பட்ட மிகவும்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனநாயகக் கட்சி தனித்துப் போட்டி

(கொழும்பு)

முன்னாள் படைத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது.

இதனடிப்படையில், ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா கொழும்பு மாவட்டத்திலும்,

24ஆம் பக்கம் பார்க்க....

## ஓகஸ்ட் 3 இல் தபால்மூல வாக்கு

(கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்புக்கான திகதிகள் தேர்தல் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய ஆசிரியர்களுக்கான தபால் மூல வாக்களிப்பு ஓகஸ்ட் 3ஆம் திகதியும் ஏனைய அரச திணைக்களங்களுக்கான வாக்களிப்பு 5ஆம், 6ஆம் திகதிகளிலும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் 17 ஆம்

24ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்றத் தாக்குதல் மற்றொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட மற்றொரு சந்தேகநபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெரியவிளான், இளவாலையை சொந்த முகவரியாகவும், ஏழாலை வடக்கு, ஏழாலையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்

23ஆம் பக்கம் பார்க்க....

## தேசியப்பட்டியலில் இடம்பிடிக்க முயற்சிக்கும் சந்திரிகா!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்வதற்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்கள் ஆர்வம் காட்டி வரும் நிலையில், சந்திரிகா குமாரதுங்கவும், மைத்திரிபால சிறிசேனவும் முன்வைத்துள்ள யோசனையால் சர்ச்சை எழுந்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்களான ஜி.எல்.பீரிஸ, அனுர பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேம்ஜெயந்த, டலஸ் அழகப்பெரும, டிலான் பெரேரா உள்ளிட்ட பலரும் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குள் நுழையத் திட்டமிட்டுள்ளனர்.


இவர்களின் பெரும்பாலானோர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவானவர்களாவர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக திரும்பும் மகிந்தவின் கவனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக தடையுத்தரவு பெற்றுக்கொள்வது குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மகிந்த ராஜபக்ஷவிற்கு வேட்பு மனு வழங்கப்படாவிட்டால், இவ்வாறு கூட்டமைப்பு மற்றும் சுதந்திரக் கட்சியின் தலைமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியனவற்றின் தலைமைப் பதவிக்காக அண்மையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால

24ஆம் பக்கம் பார்க்க....

## வேட்புமனுவில் இன்று கையொப்பம் இடும் மகிந்த

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு நேற்று சென்றிருந்ததாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்புமனுவில் கையெழுத்திடவே அவர் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு சென்றிருந்ததாக கூறப்படுகிறது.

பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் நேற்றுக் காலை முதல் எதிர்க்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனநாயகப் போராளிகள் சுயேட்சையாக களத்தில்!

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகப் போராளிகள் அமைப்பு சுயேட்சையாக போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னித் தேர்தல் தொகுதிகளில் ஜனநாயகப் போராளிகள் அமைப்பு போட்டியிடவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் வித்தியாதரனை பிரதம வேட்பாளராகக் கொண்டு சுயேட்சையாக களமிறங்க ஜனநாயகப் போராளிகள் அமைப்பு தீர்மானித்துள்ளது.

வன்னி மாவட்டத்துக்கான பிரதான வேட்

24ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயேட்சைக்குழு மட்டுமே கட்டுப் பணம் செலுத்தியது

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக நேற்று வரை ஆறு அரசியல் கட்சிகள் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான விண்ணப்ப படிவங்களை பெற்றுள்ளதுடன் மேலும், இரண்டு சுயேட்சை குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தி உள்ளதாகதாக யாழ்.மாவட்ட உதவி தேர்தல் பணிமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுதாக்கல் செய்யும் கால எல்லை எதிர்வரும் 13ஆம் திகதி நண்பகலுடன் முடிவடைகின்றது.

இந்தநிலையில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக ஆறு அரசியல் கட்சிகள் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான விண்ணப்பபடிவங்களை உதவி தேர்தல் ஆணையாளர் பணிமனையில் பெற்றுள்ளனர்.

எனினும் ஒரு அரசியல் கட்சியே நேற்று வரையான காலப்பகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளது.

இதேவேளை, வேட்புமனுதாக்கல் கடந்த 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

G.C.E (A/L)



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், அனுமதிப்பத்திரங்கள் கிடைத்தவுடன் அவற்றை பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் நலன் கருதி உயர்தரப் பரீட்சை அனுமதிப் பத்திரங்களில் புதிதாக மூன்று பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய பரீட்சார்த்திகளின் தேசிய அடையாள அட்டை இலக்கம், பாடப் பிரிவு மற்றும் பரீட்சை நிலைய இலக்கம் என்பன அனுமதிப பத்திரத்தில் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 04ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரையும் தொடர்ந்து ஓகஸ்ட் 24ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் 08ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை பரீட்சையில் மூன்று இலட்சத்து ஒன்பதாயிரத்து 69 பேர் தோற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## கண்ணீர் அஞ்சலி



எஸ். பி. நடராசா

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தொழிலதிபர் எஸ்.பி.நடராசா (அண்ணா தொழிலகம்) அவர்கள் இறைபதமெய்திய செய்தி கேட்டு துயரடைகிறோம்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-1517)

தலைவர்- இரா. பற்குணம்

கலைவாணர் நாடக மன்றம்
நார்ச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

சுதுமலை கிழக்கு அரசடி மானிப்பாய் வீதியில் வசிக்கும் பாஸ்கரன் தானுஷன் என்பவருடைய 960680251V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் (C-1510)

தொடர்புகளுக்கு: 0775269049

## வீடு விற்பனைக்குண்டு

ஈச்சமோட்டையில் 1 3/4 பரப்பில் 5 அறைகளும், குளியலறைகளுடனும் மாடி வீடு,


சுண்டுக்குளி பிரதான வீதி பாண்டியன் தாழ்வில் 2 பரப்பு, 3 அறையுடன் வீடு,

வளம்புரம் 1 1/2 பரப்பில் 3 அறைகளுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

(1079)

தொடர்புகளுக்கு - 0775671965

# குடும்பஸ்தர் மீது தாக்குதல்



(யாழ்ப்பாணம்)

றொட்டியாலடி சந்திக்கு அருகில் கடந்த மாதம் 30 ஆம் திகதி குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் இணுவிலைச் சேர்ந்த இராஸ்சயா நாகவேல்ராசா (வயது-53) என்ற குடும்பஸ்தரே தாக்கப்பட்டவராவார்.

துவிச்சக்கர வண்டியில் மல்லாகத்தில் இருந்து தனது வீட்டிற்கு செல்லும் போது றொட்டியாலடி சந்திக்கு அண்மையாக இச் சம்பவம் நடைபெற்றது.

மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் இவரைத் தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந)

## பிரமாண்டமான திறப்பு விழா (யாழ் நகரில்)

HIKVISION



HIKVISION

உலகின் முதல்த்தரப்படுத்தப்பட்ட சீ.சீ.ரீ.வி கமராக்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் உலகின் முதல்தர CCTV கமரா நிறுவனமான HIKVISION இன் யாழ் ஏக முகவர் நிறுவனம்

S S T சன் சக்தி ரேடேர்ஸ்

காலம் - 10.07.2015, வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணி

இடம் - 651, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(O.L.R தேவாலய பின்புறம் )





யாழ் வணிகர் கழக தலைவர் உயர்திரு.இ.ஜெயசேகரம் அவர்களால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட உள்ளது. உங்கள் வியாபார நிறுவனங்களின், இல்லங்களின் பாதுகாப்பை HIKVISION கமராக்கள் மூலம் மிக துல்லியமான முறையில் கண்காணித்துக் கொள்ளுங்கள்.

குறிப்பு:- ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு பதிவுகளை மேற்கொள்ளும் வர்த்தகர்கள், கமரா பொருத்துனர்கள், முகவர்களுக்கு விசேட விலைக்கழிவும் விசேட சலுகைகளும் வழங்கப்படும்.

(1082)

வாடிக்கையாளர்களுக்கு இலகு தவணைக் கொடுப்பனவு வசதிகளும் உண்டு.
(நிபந்தனைக்கு உட்பட்டது)

தொடர்பு
021 221 7994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மார்க்சிய குழு வின் ஏற்பாட்டில் பாராளுமன்ற தேர்தல் ஒரு நோக்கு எனும் கருப்பொருளில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப.4மணிக்கு சொ.சிவபாலன் தலைமையில் யாழ்ப்பாணம் DCM தனியார் கல்வி நிறுவனத்தில் அரசியல் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள் ளது.

இதில் ஆரம்ப உரையை ஏ.சி.ஜோர்ஜ் நிகழ்த்தவுள் ளார். (இ-3)

# வாள்வெட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் விளக்கமறியலில்

பளைப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

கடந்த வாரம் பளை பிரதேசத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த 19 வயதான சந்தேகநபர் ஒருவர் கட்டுவன் கூறைமுனைப் பகுதியில் மறைந்திருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில், தெல்லிப்பழை பொலிஸாரினால் கடந்த 6ஆம் திகதி அதிகாலை குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அன்றையதினமே மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் சந்தேகநபர் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அடுத்த தவணைக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் இதன்போது நீதவான் உத்தரவிட்டார். (2)

# யோகாசன பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

ஓம் பதஞ்சலி யோகா கேந் திரா நிலையத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி யோகாசன தளர் வுப் பயிற்சி வகுப்புக்கள் காலை 6 மணிக்கு பருத்தித்துறை வீதி, நல்லூரிலுள்ள வீர மாகாளி அம்மன் கோவில் திருமண மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து வரும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங் களில் காலை 6 மணிமுதல் 7 மணிவரை நடைபெறவு ள்ளது.

இப்பயிற்சி நெறியில் யோகாசனம், பிரணாயாமம், தளர்வுப் பயிற்சி நெருக்கீட்டிற்கான பயிற்சி என்பன வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சியில்வயதுவேறு பாடின்றி அனைவரும் கல ந்து கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# ‘நீரில் கிழிந்த கோடுகள்’ சிறுகதை தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பிடாரி கோவிலடியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.ஆர்.டேவிட் எழுதிய நீரில் கிழிந்த கோடுகள் சிறுக தைத் தொகுதி வெளியீட்டு விழா மனோகரா திரையரங்கு சந்திக்கு அருகிலுள்ள ஏ.எஸ். ஆர்.கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 3 மணி க்கு நடைபெறவுள்ளது.

பேராசிரியர் எஸ். சிவலி ங்கராஜா தலைமையில் நடை பெறவுள்ள் இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். இராசநாயகன், மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ. குமரன், ஆய்வுரையை இ.இரா சேஸ்கண்ணன், சிறப்பு ரையை டேவிட்டின் வாழ்வும் இலக்கியமும் எனும் தலை ப்பில் பேராசிரியர் என். சண் முகலிங்கன் ஆகியோர் நிக ழ்த்தவுள்ளனர். (இ-3)

# ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணையவே போவதில்லை

## ஜெகத் புஸ்பகுமார தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தாம் இணையப் போவதாக வெளியான தகவலை பெருந்தோட்ட கைத்தொழில் பிரதியமைச்சர் ஜெகத் புஸ்பகுமார மறுத்துள்ளார்.

தாம் ஏற்கனவே மொனராகலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிடுவதற்கான பத்திரத்தில் கையெழுத்திட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின்கீழ் போட டியிட்டு வெற்றி பெற முடியாதவர்களே இந்த கதையை பரப்பியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு முதல் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துள்ள தமக்கு அதனை கைவிடும் எண்ணம் இல்லை எனவும் புஷ்பகுமார மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

கண்ணீர் அஞ்சலி

அமரர் எஸ்.பி.நடராஜா



புகழ் பூத்த இணுவையம் பதியில் தோன்றிய சைவ பாரம்பரியம் மிக்க மூத்தோர் குடியில் வழி தோன்றலாக தோன்றிய அமரர் கந்தையா நடராஜா சிறு வயது முதல் சமயப்பற்று தமிழ்ப்பற்று, சமூகப்பற்று கொண்டவராகவும் வழங்குவதில் கொடை வள்ளலாகவும் அந்தணப் பெருமக்களிடத்தில் மிகுந்த பக்தி விசுவாசமுள்ளவராகவும் தமது குடும்பத்தின் வளர்ச்சியிலும் தொழில் வளர்ச்சியிலும் மேன்மை அடைவதற்கு அயராது உழைத்த பெருமகனார். வள்ளுவனின் குறள்பாவின் குறமுக்கமைய (தோன்றில் புகழுடன் தோன்றுக) பெரும்வாழ்வு வாழ்ந்த பெருமகனார் இன்று அமரர் ஆகிவிட்டார்.

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சுந்தர ஆஞ்சநேய பெருமானின் பாதங்களை பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியாரும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில், மருதனார்மடம், சுன்னாகம்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 06.02.1947
இறப்பு: 19.06.2014

சைமன்: மகாதேவா (தேவன்)
வடபிராந்திய போ.சபை, கோண்டாவில் (மல்லாகம் பொறிவலர்)



(1070)

அன்பான அப்பாவே!
வஞ்சகம் இல்லாத உங்களை காலனவன் கவர்ந்து சென்றானே. நல்லவர்கள் இப்பூமியில் வாழ்ந்தது இல்லை. ஏன் எங்களை விட்டு அவனிடம் சென்றீர்கள். பிள்ளைகள் நாங்கள் ஏங்கித் தவிக்கின்றோம். உங்கள் ஆசைப்பேரன் தாத்தா எங்கே என்று கேட்கின்றான். என்ன பதில் சொல்ல என்று தெரியவில்லை. நீங்கள் போன வழி பார்த்து காத்து நிற்கின்றோம். உங்கள் புதியதொரு வரவுக்காக காத்திருக்கும்...

இருபாலை கிழக்கு கொய்யாத்தோட்டம்.
பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

# ராசி பலன்

09.07.2015
(ஆனி 24, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
அட்டமி பிற்பகல் 3.48 மணிவரை
ரேவதி மாலை 6.12 மணிவரை
இராகுகாலம் 1.28-2.58 மணிவரை
சுபநேரம்-7.28-8.58 மணிவரை

வள்ளுவன்

| | | | |
|---|---|---|---|
| கேது சந் | | | சூரி செவ் புதன் |
| | மாலை 6.10 இற்கு மேடம்-சந் | | |
| | | | குரு சுக் |
| | | சனி | ராகு |

**மேடம்:** சோம்பலை விலக்குவது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்,சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும், சயனசுகக் குறையுண்டு, பிறருக்கு உதவும் நிலை உருவாகும்.

**இடபம்:** தனதானிய சேர்க்கையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பெரியோரால் மதிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஆரோக்கியமான நாள், தொழில் முன்னேற்றமுண்டு, எடுத்த காரியங்கள் கைகூடும்.

**கடகம்:** தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு விலகும், பொறுமையுடன் இருந்து காரியம் சாதிக்க வேண்டியநாள், போசன சுகக் குறைவுண்டு.

**கன்னி:** மனோதைரியம் கூடும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சயன சுகமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**துலாம்:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கும் வாய்ப்புண்டு, பகைவர்கள் விலகுவர், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் முன்னேற்றமுண்டு, காரியங்கள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்:** பணக்குறைவுண்டு, அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, முயற்சிகளில் தாமதமுண்டு, புண்ணிய காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** ரோக பயமுண்டு, சுப செலவுகளில் நாட்டம் காட்டுவீர்கள், தொழிலில் அதிக பிரயாசையுடன் செயற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** மனோ தைரியம் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, நற்சிந்தனையுண்டு, இஷ்ட சித்தியுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** செலவுகள் அதிகமாகும், போசன சுகக்குறைவான நாள், மனோ சங்கடம் கூடும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மீனம்:** வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மாதர் நட்புண்டு, சயன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள், காரிய அனுகூலமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஜனநாயக படுகொலை இனி நடக்காது !



இரண்டுமே தவறு. சோதனைகளை எதிர்கொள்ளும் இயக்கங்களும், தலைவர்களும் அவற்றுக்கான பலனகளை நிச்சயமாகப் பெறுவார்கள் என்பதை அரசியலில் அறுதியிட்டுச் சொல்ல முடியுமா என்ன? இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனின் வெற்றிக்குக் காரணமாக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில், அடுத்து நடைபெற்ற தேர்தலில் எனனவானார்? இந்தி ஆதிக்கததுக்கு எதிராக தமிழகத்தில் நடந்த மிகப் பெரிய போராட்டத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள். பலர் தீக்குளித்தும், துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகியும் மாண்டனர். ஆயிரக்கணக்கானோர் சிறை சென்றனர். ஆனால், அதையொட்டி நடந்த தருமபுரி தொகுதிக்கான மக்களவைத் தேர்தலில் திமுக தோல்வி அடைந்தது. 1962 தேர்தலில் காஞ்சிபுரத்தில் அண்ணாவும் 1967 தேர்தலில் விருதுநகரில் காமராஜரும் தோல்வியடைந்தார்களே, என்ன காரணம்? தேரதல் வெற்றி - தோல்வி என்பது எப்போதும் வாக்காளர்களின் மனநிலையைச் சார்ந்தது. அந்த மனநிலை ஏன் அப்படி இருந்தது என்பதற்கு, தர்க்கரீதியாக துல்லியமான - சரியான காரணங்களை யாராலும் சொல்ல முடியாது.

தேசிய அரசியல் நோக்கி நீங்கள் நகர்வதற்கான வாய்ப்புகள் அந்தக் காலகட்டத்தில் உருவாகியிருககின்றன. அப்போது டெல்லி நோக்கி நகர்ந்திருந்தால், இன்றைக்கு முலாயம் சிங் யாதவ், லாலு பிரசாத் யாதவ் போல தேசிய அரசியலில் ஓர் இடத்தைப் பிடித்து வைத்துக்கொண்டே கூட மாநில அரசியலையும் கைக்குள் வைத்திருந்திருக்கலாம். நீங்கள் ஏன் போகவில்லை?

என்னுடைய சிந்தனையும் செயலும் எப்போதும் 'தமிழ் - தமிழர் - தமிழ்நாடு' என்ற எல்லைக்குள்ளேயே சுழன்று கொண்டிருக்கின றன. இங்கேயே செய்ய வேண்டிய காரியங்கள் இன்னும் ஆயிரமாயிரம் இருக்கும்போது, தேசிய அரசியல் எண்ணம் எப்படி வரும்?

ஆனால், அப்போது தொடங்கி இப்போது வரை தேசிய அரசியலில் ஒரு வலைப் பின்னலை திமுகவால் உருவாக்கவே முடியவில்லை. இன்றளவும் திமுகவின் பெரிய பலவீனங்களில் ஒன்றாகவே இது நீடிக்கிறது. இதை உணர்ந்திருக்கிறீர்களா?

உணர்ந்திருக்கிறோம். அதைச் சரிசெய்வதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறோம்.

நெருக்கடிநிலை போன்ற சூழல்கள் உண்மையில் கூட்டாட்சித் தத்துவம் இங்கு எவ்வளவு வலு விழந்திருக்கிறது என்பதற்கும், மாநிலங்களின் உரிமைகள் எவ்வளவு துச்சமானவையாக அணுகபபடுகினறன என்பதற்கும் உதாரணங்கள். தேசிய வாதத்தின் பெயரால், சுதந்திரத் துக்குப் பின் மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டேதான் இருக்கிறது. தேசிய அரசில் கூட்டணி ஆட்சியில் திமுக பங்கேற்றிருந்த காலகட்டங்களிலெல்லாம் இது தொடர்பாக ஏதேனும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறீர்களா? அவற்றுக்கு தேசிய அரசுகளின் எதிர்வினை என்ன?

மாநிலங்களின் உரிமைகள் நாளுக்குநாள் தேய்ந்து கொண்டே வருவதை உணர்ந்துதான் 40 ஆணடுகளுக்கு முன்பே, 'மா நிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்ற முழக்கத்தை திமுக முன்வைத்தது. எபபோதுமே இது தொடர்பாக நாங்கள் பேசி வந்திருக்கிறோம். 1970 மார்ச் 21 அன்று டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், "மாநிலங்களுக்கு ஏன் அதிக அதிகாரங்கள் தரப்பட வேணடும்?" என்று நான் பேசியதை தேசிய அளவில் பல கட்சிகள் ஆதரித்துப் பேசின. நாட்டிலேயே முதன முதலாக 1974 இல் மாநில சுயாட்சித் தீர்மானத்தைத் தமிழகச் சட்ட மன்றத்தில்தான் நிறைவேற்றினோம். அப்போது தொடங்கி இப்போது வரை எங்கெல்லாம், எப்போதெல்லாம் வாய்ப்புக் கிடைக்கிறதோ அங்கெல்லாம், அப்போதெல்லாம் மாநிலங்களின் மேலதிக உரிமைகளுக்கான முயற்சிகளை மேற்கொளளவே செய்கிறோம். தேசிய அரசுகளின் எதிர் வினைகள்தான் எல்லோருக்கும் தெரியுமே?

இந்தியா இன்னொரு நெருக்கடி நிலையை எதிர்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறதா? இன்னொரு முறை அப்படியான ஜனநாயகப் படுகொலை நடத்தப்படாமல் இருக்க இந்தியா செய்ய வேண்டியது என்ன?

அப்படிப்பட்ட வாய்ப்பிருப்பதாக நான் நினைக்கவில்லை. நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டும் அல்லதைக் கொண்டு வந்தவர்களும் பின்னாட்களில் அதன் கடுமையான விளைவுகளை எதிர்கொள்ளவே செய்தார்கள். எனவே இன்னொரு முறை அந்த ஜனநாயகப் படுகொலையை நடத்தலாம் என்று யாரும் கனவிலும் கூட நினைத்துப் பார்க்க மாட்டார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

நெருக்கடிநிலை கற்றுக்கொடுத்த பெரிய பாடம் என்ன?

அண்ணா அடிக்கடி சொல்வார், "இடையறாத விழிப்புணர்வே, ஜனநாயகத்துக்கு நாம் தரும் விலை" என்று. அந்த உண்மையே, அனுபவரீதியாகக் கற்றுக்கொண்ட பெரிய பாடம்.

திமுகவின் அடையாளமாக அந நாட்களில் அறியப்பட்ட போர்க் குணம் மிக்க உறுதியான எதிர் அரசியலை இன்று பார்க்க முடியவில்லை. இது தலைமுறை மாற்றத்தின் விளைவா அல்லது கால ஓட்டத்தின் சிதைவா?

திமுகவின் போர்க் குணம் குறைந்துவிடவில்லை என்றைக்கும் அது குறையவும் குறையாது. இன்றைக்கும் ஜனநாயகத்துக்குப் பாதகமான ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டால், திமுகவிடமிருந்து அந்தப் போர்க் குணத்தை நீங்கள் பார்க்கவே செய்வீர்கள்.

முந்தைய கேள்வியின் தொடர்ச்சியாகவே இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். ஆர்.கே.நகர் தொகுதியில் ஜெயலலிதாவை எதிர்த்துப் போட்டியிடுவதில்லை என்று திமுக எடுத்த முடிவு எந்த அளவுக்குச் சரியானது?

வியூகரீதியில் அது எத்தனை சரியானது என்பதைப் பின்னாளில் பார்ப்பீர்கள்.

வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பிரச்சினைகள் உங்கள் அரசியலை உந்தித் தள்ளியிருக்கின்றன. இந்த 92 வயதில், இன்றைய காலகட்ட அரசியலில் உங்களை உந்தித் தள்ளக் கூடிய பிரச்சினை எது?


திராவிட இயக்கத்தை எப்படியும் வீழ்த்த வேண்டும் என்று எண்ணிச் செயல்படும் சக்திகள். அவற்றை எப்படி வேரோடு களையலாம் எனும் எண்ணமே ஒவ்வொரு நாளும் கண் விழிப்பதிலிருந்து என்னை இப்போது உந்தித்தள்ளுகிறது!

-இணையம்-

## அதிசய உலகம்

### எரிபொருள் பாவனையில் உலக சாதனை படைத்த Honda

உலகளவில் மக்களின் நன்னம்பிக்கையை வென்ற மோட்டார் வாகன நிறுவனங்களுள் ஒன்றாக விளங்கும் Honda நிறுவனத்தினால், புதிதாக வடிவமைக்கப்பட்ட கார், எரிபொருள் பாவனையில் உலக சாதனை படைத்துள்ளது.




எரிபொருள் தாங்கியில் முற்றாக எரிபொருள் நிரப்பப்பட்ட நிலையில் கடந்த மாதம் 1 ஆம் திகதி இதற்கான சோதனை நிகழ்த்தப்பட்ட போது 24 ஐரோப்பிய நாடுகளின் ஊடாக சுமார் 8,287 மைல் தூரம் பயணம் செய்துள்ளது.

அதாவது சராசரியாக ஒரு கலன் எரிபொருளில் 100.31 மைல்கள் தூரம் பயணித்துள்ளது.

இதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இடத்தினை ஜூன் மாதம் 24 ஆம் திகதி மீண்டும் வந்தடைந்துள்ளது.

இதனை ஒரு புதிய கின்னஸ் சாதனையாக பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் எரிபொருள் சிக்கனம் கொண்ட இக் கார்கள் எதிர்காலத்தில் சந்தையில் பலத்த வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சமைப்போம் சுவைப்போம்

### மரக்கறி போண்டா



**தேவையான பொருள்கள்**

கடலை மாவு - 1கப்
அரிசி மாவு -13 கப்
உப்பு - தேவைக்கேற்ப
மிளகாய்ப்பொடி - 3/4 டீஸ்பூன்
அப்பச் சோடா - 2 சிட்டிகை

**காய்கறி மசாலா செய்ய**

பொடியாக நறுக்கிய வெங்காயம் -1/2 கப்
பொடியாக அரிந்த காய்கறித் துண்டுகள் - 3கப்
காலிப்ளவர், உருளைக்கிழங்கு, பீன்ஸ், கரட்
உரித்த பட்டாணி - 1/4 கப்
இஞ்சி பூண்டு விழுது - 1/2 கப்
நசுக்கிய பச்சை மிளகாய் - 11/2 டீஸ்பூன்
உப்பு - தேவைக்கேற்ப
பொடியாக நறுக்கிய கொத்தமல்லித்தழை - 1/2 டேபிள் ஸ்பூன்
மஞ்சள் தூள் - 1/4 டேபிள் ஸ்பூன்
எண்ணெய் - பொரிப்பதற்குத் தேவையான அளவு
லெமன் - 1

**செய்முறை**

நறுக்கிய காய்கறிகளில் தண்ணீர் சேர்க்காமல் ஆவியில் பிரஷர் குக்கரில் வேக வைக்கவும்.

பாத்திரத்தில் சிறிது எண்ணெய் விட்டுச் சூடாக்கி இஞ்சி - பூண்டு விழுது, பொடியாக அரிந்த வெங்காயம் சேரத்து பொன்னிறமாகும் வரை வதக்கவும்.

அதிலேயே மிளகாய் விழுது, மஞ்சள் தூள் சேர்த்து வெந்த காய்கறிகளைச் சேர்க்கவும். பெரிய அடுப்பில் சிறிது நேரம் நன்கு வதக்கவும்.

நீர் நன்கு வற்றி காய்கறிக் கலவை ஒன்றுசேர்த்து வரும்போது உப்பு, நறுக்கிய கொத்தமல்லி சேர்த்து கலந்து அடுப்பிலிருந்து இறக்கவும்.

மசாலா நன்கு ஆறியதும் எலுமிச்சங்காயளவு உருண்டைகள் செய்யவும். சலித்த கடலை மாவு, அரிசி மாவு, அப்பச் சோடா, மிளகாய்த்தூள் தண்ணீர் சேர்த்து கலந்து கொஞ்சம் சொஞ்சமாகத் தண்ணீர் சேர்த்து கட்டிதட்டாமல் மாவைத் தயாரிக்கவும். தோசைமாவு பக்குவத்தில் செய்து வைத்துள்ள மசாலா உருண்டைகளை ஒவ்வொன்றாக அதில் தோய்த்து எடுத்து சூடான எண்ணெயில் போட்டு பொரிக்கவும். சூடாகப் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு மாணவி வித்தியா கொலையாளிகளுக்காக அலுகோசு பதவியை ஏற்றுக்கொள்ளவும் தயார்

## சமிததேரர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**புங்குடுதீவில் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் கொலையாளிகளை தண்டிக்க அலுகோசு பதவியை ஏற்றுக்கொள்ளத் தயார் என தென் மாகாணசபை உறுப்பினர் பெத்தேகம சமித தேரர் தெரி வித்துள்ளார்.**

தென் மாகாணசபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளுக்காக அலுகோசு பொறுப்பினை ஏற்றுக்கொண்டு, காவி உடையை துறந்து மீண்டும் காட்டுக்கு சென்று தியானம்செய்வேன்.

நான் ஓர் பௌத்த பிக்கு. நாம் யாரையும் குரோதமாக நினைப்பதில்லை. எமது நாட்டில் தூக்குத் தண்டனை அமுல்படுத்தப்படுவதில்லை.

தூக்குத்தண்டனை நிறைவேற்ற அலுகோசுக்கள் நியமிக்கப்பட்டாலும் அவர்கள் அந்தக் கடமையை ஆற்ற விரும்புவதில்லை. விலகிச் செல்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் கொலை செய்யப்பட்ட மாணவியின் கொலையாளிகளுக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தால், பிள்ளைகளின் நாமத்தில் அலுகோசு பதவியை ஏற்றுக்கொண்டு கொலையாளிகளை தண்டிக்கத்தயார்.

நீதிமன்றம் தண்டனை விதித்தால் நிச்சயமாக நான் அலுகோசு பதவியை ஏற்றுக்கொள்வேன்.

அதன் பின்னர் எனது உயிர் பிரிந்தாலும் பரவாயில்லை. யாழ்ப்பாணத்திற்கு சென்ற ஜனாதிபதி விசேட நீதிமன்றின் ஊடாக வித்தியா வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படும் என உறுதியளித்திருந்தார்.

இந்த நடவடிக்கை பாராட்டுக்குரியது என பெத்தேகம சமித தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவர வேண்டும்

## தேசிய மக்கள் அமைப்புக்கள் வலியுறுத்து

நாட்டை பாதாளத்தில் இருந்து காப்பாற்றுவதற்காக மகிந்த ராஜபக்ஷசவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவர வேண்டும் என சிங்கள தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பொங்கமுவ நாலக தேரர், மெதகம தம்மானந்த தேரர், இந்துரா கரே தம்மரத்ன தேரர், கலாநிதி குணதாச அமரசேகர ஆகியோர் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ நாட்டை அபிவிருத்தி செய்யும் போது இன பேதங்களை கவனத்தில் கொள்ளவில்லை. வடக்கிலும் தெற்கிலும் ஒரே நேரத்தில் அபிவிருத்திகளை மேற்கொண்டார்.

இதனடிப்படையில் அதில் குறைபாடுகள் ஏற்பட்டிருக்கு மாயின் அது தெற்கில் உள்ள சிங்களவர்களுக்கு மட்டுமே ஏற்பட்டது எனவும் தெரிவித்தனர். (இ-7)


# ஐக்கிய தேசியக் கட்சியில் நந்திமித்ர ஏக்கநாயக்க?

திருடர்கள், மோசடிக்காரர்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் வேட்புமனு வழங்கினால் தான் மாற்று தீர்மானம்ஒன்றை மேற்கொள்ள நேரிடும் என இராஜாங்க அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அவ்வாறான தீர்மானத்தை மேற்கொண்டால் தான் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில் இருந்து விலகி ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துகொள்ளவுள்ளதாக தெரிவித்தார்.

திருடர்கள் மற்றும் மோசடிக் காரர்களுடன் இணைந்தால் இந்நாட்டில் நல்லாட்சி நிலை நாட்ட முடியாதென்று அவர் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)


# புகைப்படப் பொக்கிஷம்




வாடா மல்லி வாடா...



பழுத்த பாகற்காய்




இராவணன் வெட்டு



ஈ... ஈ... ஈ...




மயக்கும் மாலை பொழுதே நீ வா வா




குலை குலையாய் கொய்யா...

அன்பு வாசகர்களே நீங்க[illegible] valampurii@gmail.com
எனும் முகவரிக்கு உங்கள் [illegible] குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இளம்பெண் மீது பாலியல் வன்புணர்வு

# தலைமறைவான இராணுவ வீரருக்கு எதிராக நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்தது

(யாழ்ப்பாணம்)

**கிளிநொச்சியில் கடந்த 2010 ஆம் ஆண்டு இளம் பெண் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டதாக கூறப்படும் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 4 இராணுவ வீரர்களில் தலைமறைவாகியுள்ள இராணுவவீரர் ஒருவருக்கு எதிராக யாழ். மேல்நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.**

இந்த வழக்கின் நான்காவது எதிரியாகிய இராணுவ வீரர் தலைமறைவாகி வெளிநாட்டுக்கு ஓடியிருந்தால், சர்வதேச பொலிஸார் மூலமாக அவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் எதிரிகளாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள 4 இராணுவ வீரர்களில் 3 பேர் வழக்கு விசாரணைகளில் ஆஜராகி வருகின்றனர். நான்காவது எதிரி இல்லாமலேயே வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வழக்கு, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இராணுவ பொலிஸ் அதிகாரி வழக்குத் தொடுனர் தரப்பில் சாட்சியமளித்தார். இதேநேரம் வழக்குத் தொடுனர் தரப்பு வழக்கை முடிவுறுத்துவதாக அரச சட்டத்தரணி திருமதி நளினி சுபாகரன் மன்றில் தெரிவித்தார்.

அப்போது நான்காவது எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை. அவரது சார்பில் சட்டத்தரணி எவரும் முன்னிலையாகியிருக்கவில்லை. இதனையடுத்து நான்காவது எதிரியாகிய அந்த இராணுவ வீரரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறு நீதிபதி இளஞ்செழியன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அந்த எதிரி, வெளிநாட்டுக்கு ஓடியிருந்தால், சர்வதேச பொலிஸாரின் உதவியைப் பெற்று அவர்கள் மூலமாக அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிபதி தமது பிடியாணை கட்டளையில் உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பிடியாணை தொடர்பாக பொலிஸ்மா அதிபர், இராணுவத் தளபதி ஆகியோருக்கும் உடனடியாக அறிவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். எதிரி தரப்பு சாட்சிகளை அழைப்பதற்காக வழக்கை நீதிபதி எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (இ-4)

## தொழிற்பயிற்சி கற்கை நெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் கைதடி மற்றும் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடத்தப்படும் காய்ச்சி இணைப்பாளர் (Welding), மரவேலை தொழில் நுட்பவியலாளர் (Wood Craftsman) ,கட்டட நிர்மாண உதவியாளர் (Construction Craftsman),வீட்டு மின்னிணைப்பாளர் (Electrician) தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு மாதாந்த உதவிக் கொடுப்பனவுடன் இளைஞர் யுவதிகளை சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக் கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் இல12, வீரசிங்கம் மண்டபம்,(1ம் மாடி), கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் அல்லது அந்தந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## திருமறைக் கலாமன்றத்தின் ஆடித்திங்கள் பொற்தூறல்

(யாழ்ப்பாணம்)

பொன்விழா ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற 'பொற்தூறல்' நிகழ்ச்சித்தொடரின் இம்மாதத்துக்கானநிகழ்வு', ஆடித் திங்கள் பொற்தூறல' என்னும் பெயரில் நாளை மறுதினம் சனிக்கிழமை 11ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு, இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக கலாமன்ற அரங்கில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக நுண் கலைத் துறைத தலைவர் பேராசிரியர் ஏ.என்.கிருஷ்ணவேணி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்சிகளாக அ. அமிர்தலோஜனன் மற்றும் அ.அமிர்தசிநதுஜன் ஆகியோரின் இசைக் கச்சேரியும திருமறைக் கலாமன்ற இசை நாடகப்பிரிவு வழங்கும் 'குசேலர' இசை நாடகமும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கலையார்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்புவிடுத்துள்ளது. (இ-7)




## வேட்பு மனுத்தாக்கல் முடிவுற்ற பின்னர் கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்

### யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தகவல்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுத்தாக்கல்கள் முடிவுற்ற பின்னர் தேர்தலில் போட்டியிடும் கட்சி உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது தேர்தல் நடைமுறைகள் தொடர்பில் கட்சி உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல்கள் கடந்த 6 ஆம் திகதி ஆரம்பித்துள்ள நிலையில் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய முடியும்.

இவ்வேட்பு மனுத்தாக்கல் காலம் அறிவிக்கப்பட்ட பின்பு கடந்த 6 ஆம் திகதி ஜனசெத பெரமுன என்ற கட்சி முதலாவதாக வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தது.

ஏனைய கட்சிகளும் எதிர்வரும்தினங்களில்வேட்புமனுத்தாக்கல் செய்த பின்னர் வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான காலம் முடிவுற்ற பின்னர் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்களுக்கான சந்திப்பொன்று இடம்பெறும்.

இச்சந்திப்பில் தேர்தல் காலங்களில் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள், தேர்தலின்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளன என யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்தார்.

இதேபோல யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் கட்சி வேட்பு மனுத்தாக்கல் செய்யும் ஒவ்வொரு கட்சி சார்பிலும் 10 வேட்பாளர்கள் போட்டியிட முடியும்.

இவ்வாறு போட்டியிடும் அனைத்துக் கட்சி வேட்பாளர்களும் யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருடன் சந்திப்பு மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## பெண்ணின் மீளாய்வு மனு மேல் நீதிமன்றால் தள்ளுபடி

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்ட பெண்ணின் மீளாய்வு மனு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ம. இளஞ்செழியனால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முழங்காவிலை சேர்ந்த பெண் ஒருவர் கடந்த மே மாதம் 14 ஆம் திகதி 3750 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானத்துடனும் மதுபானத்துக்கு பயன் படுத்தப்படும் கோட்டாவுடனும் கைது செய்யப்புட்டார்.

கடந்த ஜூன் மாதம் 3 ஆம் திகதி கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் இவருடைய வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதற்கு அமைய சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றத்துக்காக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டமும், கோட்டா வைத்திருந்த குற்றத்துக்காக ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாதண்டமும் அத்துடன் ஒரு வருட கால சாதாரண சிறையும் வழங்கி கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதிபதி ஜனாப் வஹாப்தீன் தீர்ப்பளித்தார்.

இத்தீர்ப்பு தொடர்பாக கடந்த 6 ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றில் மீளாய்வு விண்ணப்பம் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் இந்த வழக்கு மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டு மேல் நீதிமனற நீதிபதி தீர்ப்பளித்த போது,

சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கும் சமூக சீர்கேடுகளை ஒழிப்பதற்காகவும் அதிக பட்ச தண்டனை வழங்குவதன் மூலம் இனிவரும் காலங்களில் புதிதாக குற்றம் செய்வதற்கு இத்தீர்ப்பு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நீதிமன்ற தீர்ப்புக்கள் ஒரு எச்சரிக்கை மணியாக ஒலிக்க வேண்டும் என்ற சமூக நன்நோக்கத்தோடு நீதிபதி இந்த தீர்பை வழங்கியுள்ளார் என்று மேல் நீதிமன்றம் கருதுகிறது என்றும் அவரது தீர்ப்பில் எந்தவித சட்ட ரீதியான பிழைகளும் இல்லை என்பதுடன் சட்ட வரம்புக்கு உள்ளே அவருடைய தீர்ப்பு அமைந்துள்ளது.

குறிப்பிட்ட குற்றத்தை சம்பந்தப்பட்டவர் ஒத்துக் கொண்டுள்ளார் என்ற ரீதியில் சட்ட வரம்பு எல்லையில் அதிக பட்ச தண்டனை வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க அதிகாரம் உண்டு.

குறிப்பிட்ட குற்றச் செயல்கள் சமூக குற்றச் செயலாக இருப்பதால் கிளிநொச்சி நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு சரியானது என்றும் அவருடைய தீர்ப்பில் தலையிட முடியாது என்றும் கூறி குறித்த மீளாய்வு மனுவை மேல் நீதிமன்ற நீதிபதி ம. இளஞ்செழியன் தள்ளுபடி செய்துள்ளார். (இ-9)

## களிமண் பறிக்க காரணம் என்ன?

(பொற்பதி)


வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி தொடக்கம் கட்டைக்காடு வரையான 3 கிலோ மீற்றர் நீளமான வீதி திருத்தத்திற்கு களிமண் பறிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மாமுனை தொடக்கம் வெற்றிலைக்கேணி வரையான 17 கிலோமீற்றர் வீதி திருத்திற்கு கற்கள் பறிக்கப்பட்டுள்ள நிலையில் மிகுதி 3 கிலோ மீற்றருக்கும் ஏன் களிமண் பறிக்கப்பட்டுள்ளது எனப் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா அபிவிருத்தித் திட்டத்தில் வீதிகள் திருத்தப்பட்டு வரும் நிலையில் களிமண்ணினால் வீதி செப்பனிடப்படுவதற்கு யாழ்.மாவட்டச் செயலகம் அனுமதி மறுத்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் மேற்படி 3 கிலோ மீற்றர் வீதி கிரவல் வீதியாக காணப்படுகின்ற நிலையில் அதனை களிமண்ணினால் செப்பனிட முயற்சிப்பது ஏன் என்று பொதுமக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

உரிய அதிகாரிகள் இதில் தலையிட்டு தமக்கு தார்வீதி அமைத்துத் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-64)



பொலிகை மக்கள் முன்னேற்றக்கழகத்தின் ஊடாக பொலிகண்டி அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்ட போது...
(படம்: கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் முதலாம் நிலை மாணவர்களுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந. தெய்வேந்திரராஜா அவ்ரது பாரியார் பாமா தெய்வேந்திரராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

## நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலய நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆனைக்கோட்டை சந்தியிலுள்ள பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி. வீ. அருளையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலிகாமம் வலய வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# ஐ.தே.கவின் வேட்பு மனுவில் எஸ்.பீ.நாவின்ன கையொப்பம்

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் அமைச்சர் எஸ்.பீ.நாவின்ன எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி வேட்பு மனுவில் கையொப்பமிட்டுள்ளார்.**

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகத்தில் வைத்து அவர் கையொப்பமிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொருளாளரும் தொழில் அமைச்சருமான எஸ்.பீ. நாவீன்ன கடந்த 4ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

அதற்கமைய அவர் நேற்று ஐக்கிய தேசிய கட்சி வேட்புமனுவிலும் கையொப்பமிட்டுள்ளார். (இ-7)


அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்
இன்று 19 ஆம் திருவிழா



வினை தீர்ப்பாய் வேலழகா!

புள்ளி மயிலேறும் புனிதனே இணுவைக் கந்தா
வள்ளி குஞ்சரி பங்கா-வளர் நொச்சியம்பதியில்
அள்ளி அள்ளி அருள் சொரியும் ஆறுமுகா!
தெள்ளுதமிழ் தந்த தெய்வம் நீ அல்லவா!
பாடி வரும் பக்தர் கூட்டம்-ஆவலாய்
தேடி வரும் அடியார் காவடி ஆட்டம்
கூடி வரும் மங்கையர் தம் வேண்டுதலை
ஓடி வந்து தீர்ப்பாய் வேலழகா! சண்முகா!
சந்தமொழி திருப்புகழ் நாயகனே-எம்
முந்தைவினையறுப்பாய் மயில் வாகனனே!

சைவப்புலவர் சண்முகலிங்கம்
முகுந்தன்
இணுவில்.

பத்தொன்பதாம் திருவிழா உபயகாரர்

(சீ-1389)


## இரத்ததானம்

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் 5வது இரத்த தானமுகாமை நாளை மறுதினம் சனிக்கிழமை இள்வாலை புனித அன்னாம்மாள் ஆலய முன்றிலில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடத்தவுள்ளது.

கடந்த முறை 60 குருதிக் கொடையாளிகளுடன் இரத்த தான முகாம் வெற்றி கண்டதை அடுத்து இம்முறை 61 குருதிக் தொடையாளர்கள் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இரத்த தான முகாம் முன்னெடுக்கப்படவுள்ளது.(இ)

# நடமாட உதவும் உபகரணங்கள் இலவசமாக வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 28 ஆண்டுகால மனித நேய சேவை நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரையும் பூநகரி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள முழங்காவில் ஆதார வைத்தியசாலை வளாகத்தில் நடமாட உதவும் உபகர்ணங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. அத்துடன் செயற்கை அவயவங்களை திருத்தம் செய்யும் பணியும் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே நடமாடும் உபகரணங்கள் தேவைப்படுவோர் மேற்படி சேவையில் பங்குகொண்டு பயன்பெற முடியும் என யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன தலைவி டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (இ-3)


தென்மராட்சி- வரணி-மாசேரி

திருவருள் மிகு புராதன குருநாதர் கோயில்
மகா பொங்கல் திருவிழா விஞ்ஞாபனம்- 2015

09.07.2015 (ஆனி 24) இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் சந்தையிலி ருந்து பண்டமெடுத்தல், மாலை பூசை, அன்னதானம்.

10.07.2015 (ஆனி 25) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி விசேட அபிஷேகம் பூசை பிற்பகல் 7 மணிக்கு கோயிலிற்கு பண்டமெடுத்தல்.

11.07.2015 (ஆனி 26) சனிக்கிழமை அதிகாலை 4.30 மணி வளர்ந்து நேருதல், ஸ்ரீலஸ்ரீ குருநாத நாகப்பசுவாமி சமாதிக்கு பூசை, கத்திமடை, விசேட பூசைகள், பரிகாலம் வழிவிடல், அன்னதானம் என்பன குருநாதர் திருவருளுடன் பாரம்பரிய முறைப்படி நடைபெறும்.

அனைவரும் வருக குருநாதர் திருவருள் பெறுக.
சிவத்திரு நா. முருகேசபிள்ளை வரணியூர்
சைவப்புலவர்- பரம்பரை சிவகலைப்பூசகர்,
சிவத்திரு. சி.கா.கமலநாதன் ஐயா J.P. பரம்பரை
தர்மகர்த்தா, பிரதம பூசகர்



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 16 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ லண்டன் PR<br>தொ.இ: B/4701 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1 ஆம் பாதம்<br>கி.பா: 61 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ காசாளர்<br>தொ.இ: G/4703 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 42 செவ் 1 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Social Service/ அவுஸ்திரேலியா PR<br>தொ.இ: B/4704 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1 ஆம் பாதம்<br>கி.பா: 8 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4706 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 23 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில் சிவில் பொறியியலாளர்<br>தொ.இ: B/4705 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2 ம் பாதம்<br>கி.பா: 45<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA,CIMA/ கணக்காளர் மலேசியா<br>தொ.இ: G/4708 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4 ஆம் பாதம்<br>கி.பா: 35<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: வங்கியாளர்/ USA<br>தொ.இ: B/4707 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1 ஆம் பாதம்<br>கி.பா: 65<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/4710 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக நிலைய உரிமையாளர்கள் சட்டங்களை கடைப்பிடிக்க வேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை இணைப்பதிகாரி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்டங்களை வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் இணைப்பதிகாரி ந.விஜிதரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு மேற்படி அதிகாரசபையின் திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய சட்டஒழுங்குகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மாதங்களை விட தற்போது வர்த்தக நிலையங்களில் குற்றங்கள் குறைவடைந்து காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த ஜூன் மாதம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில்விலைப்பட்டியல் காட் சிப்படுத்தப்படாமை,காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தமை,கூடிய விலைக்கு பொருட்கள் விற்றமை போன்ற குற்றங்களுக்காக 19 வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யப்பட்டன.

அதில் 12 குற்றங்களுக்கு எதிரான வழக்குகளில் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டதற்கு அமைய 24 ஆயிரம் ரூபாய் தண்டமாக நீதிமன்றத்தினால் கடந்த ஜூன் மாதம் அறவிடப்பட்டுள்ளது. வியாபாரிகள் தமது வர்த்தக நிலையங்களில் பொருட்களின் விலைப் பட்டியல் காட்சிப்படுத்துதல், கட்டுப்பாட்டு விலைக்கு பொருட்களை விற்றல்,தரக் குறியீடுகளை கவனத்தில் கொள்ளுதல், காலாவதியான பொருட்களை வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனை செய்வதைத்தவிர்த்தல்,நீண்டகால பாவனைப் பொருட்களுக்கு ஆக குறைந்தது 6மாத கால உத்தரவாதம் வழங்கப் படவேண்டும். இவ்வாறான சட்ட ஒழுங்குகளைப் பின்பற்றி நடக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

# வெற்றிடம் நிரப்பப்படாமையால் சேவையைப்பெறுவதில் தாமதம்

## பொதுமக்கள் ஆதங்கம்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் பணிபுரிந்த பிரதி திட்டமிடல் பணிப்பாளர் இடமாற்றலாகி சென்று இரு மாதங்கள் கடந்த நிலையில் அவரின் வெற்றிடத்திற்கு இதுவரை எவரும் நிரந்தரமாக நியமிக்கப்படாமையால் தமது சேவையினை பெற்றுக் கொள்வதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்





கொள்வதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேச செயலகத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள 46 கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல்வேறுபட்ட கஷ்டங்களை சந்திப்பதாக கூறுகின்றனர்.

தற்போது இக்கடமையினை நிறைவேற்றுவதற்காக பிரதேச செயலாளரினால் தற்காலிகமாக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து குறித்த வெற்றிடத்தை நிரப் புவதற்கு ஆவன செய்ய வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-302)



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் அமைந்திருந்த குழந்தை இயேசு ஆலயமானது வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது முற்றாக சேதமடைந்தது. தற்போது குழந்தை இயேசு ஆலயமானது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் நிர்மாணப்பணிகள் நடைபெற்று வருகின்றது. இந் நிர்மாணப் பணிகள் விரைவில் பூர்த்தியடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்:-முள்ளியவளை செய்தியாளர்)

# மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு கற்றல் உபகரணங்கள்

## வழங்கி வைத்தார் ரவிகரன்



வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனினால், மாணவர்களின் பாடசாலை இடைவிலகலை முற்றாக நீக்கும் பொருட்டும் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டும் தாயகத்தில் சாதிக்கும் சந்ததி என்ற செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

இதற்கமைய அண்மையில் கனடா வாழ் உறவுகளின் உதவியுடன் யாழ்.றோட்டறி கழக அனுசரணையுடன் உடையார் கட்டு மகாவித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்ட 12ம் கட்டத்தில் மேலதிகமாக 50 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

உடையார்கட்டு மகாவித்தியாலயம், உடையார்கட்டு அ.த.க. பாடசாலை மற்றும் குரவில் தமிழ் வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளில் இருந்தும் பெற்றோரில் ஒருவரை அல்லது இருவரையும் இழந்த, காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தில் உள்ள, வறுமையோடு பாடசாலை செல்லும் மாணவர்கள் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# (சா/த) பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான போட்டி

(மல்லாவி)

வடக்கு மாகாணக் கல்வி திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற 12 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் இருந்து நடப்பாண்டில் க.பொ.த.(சா/த) பரீட்சை எழுதவுள்ள மாணவர்களது சித்தி வீதத்தை அதிகரிக்கும் நோக்குடன் பரீட்சை எழுதவுள்ள அனைத்து மாணவர்களும் பங்கேற்கும் கல்வி தொடர்பான விழிப்புணர்வூட்டும் வாசகமாக்கும் போட்டி -2015 எனும் தொனிப்பொருளில் போட்டி நிகழ்வு நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இப்போட்டியானது பாடசாலை மட்டம், வலயமட்டம்,மாகாண மட்டம் என மூன்று நிலைகளில் இடம்பெறவுள்ளது.

இதில் பாடசாலை மட்டப்போட்டிகள் யாவும் மாணவர்களிடையே நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பாக நடத்தப்பட்டு சிறந்த ஆக்கம் ஒன்று தெரிவு செய்யப்பட்டுவலய மட்ட போட்டிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

வலயமட்டப்போட்டிகள் யாவும் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் மாணவர்களிடையே நடத்தப்பட்டு சிறந்த ஆக்கங்கள் மூன்று தெரிவு செய்யப்பட்டு மாகாணமட்டப்போட்டிக்கு அனுப்பிவைக்கப் படல் வேண்டும்.

இப்போட்டிகளின் போது வலய, மாகாண ஆகிய மட்டங்களில் தெரிவு செய்யப்படும் சிறந்த ஆக்கங்கள் மூன்றிற்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும்.

இப்போட்டி தொடர்பான நிபந்தனைகளும் விதிமுறைகளும் அடங்கிய சுற்றுநிருபம் அனைத்து வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்கி பலப்படுத்துவதற்கு பாடசாலைகள் முன்வரவேண்டும்

## வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் வேண்டுகோள்



இலங்கையில் பொருளாதாரத்துக்குப் பங்களிப்புச் செய்வதில் அரச துறைக்கும் தனியார் துறைக்கும் அடுத்தபடியாக, மூன்றா வது துறையாகக் கூட்டுறவுத்துறை உள்ளது. 'ஒருவர் அனைவருக்காகவும் அனைவர் ஒருவருக்காகவும் என்ற உயரிய கோட்பாடோடு இயங்கும் கூட்டுறவுத்துறை சமூகத்தில் சகல மட்டங்களிலும் கட்டியெழுப்பப்படல் வேண்டும். அந்த வகையில், கூட்டுறவுத் துறை வளர்ச்சியின் முதற்படிக்கட்டாக, மாணவர் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்கி அவற்றைப் பலப்படுத்துவதற்குப் பாடசாலைகள் முன்வர வேண்டும் என்று வடக்கு கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் கூட்டுறவு தொடர்பாகப் பாடசாலைகளில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றிய போது,

உலகின் பல்வேறு நாடுகளில் பல்கலைக் கழகங்களிலும் பாடசாலைகளிலும் மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட கூட்டுறவு அமைப்புகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. ஆனால், நாங்கள் மாணவர் கூட்டுறவு அமைப்புகள் பற்றிய அக்கறை அற்றவர்களாக உள்ளோம். யாழ்.மாவட்டத்தில் 56 பாடசாலைக் கூட்டுறவு அமைப் புகள் கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளன. இவற்றில் மூன்றே மூன்று அமைப்புகள்தான் உயிரோடு உள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பாடசாலைகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகளிலும் வவுனியா மாவட்டத்தில் ஏழு பாடசாலைகளிலும் மன்னார் மாவட்டத்தில் மூன்று பாடசாலைகளிலும் எனறு வடக்கில் உள்ள ஆயிரம் பாடசாலைகளில் 23 பாடசாலைகளில் மட்டுமே கூட்டுறவு அமைப்புகள் இயங்கி வருகின்றன.

மாணவர்கள் தங்கள் கற்றல் நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்கிச் செயற்பட முடியும். பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலைகளை இவர்களே நடத்தலாம். இங்கு நியாய விலையில் கற்றல் உபகரணங்களை விற்பனை செய்யலாம். மாணவர்களால் மாணவர்களுக்காகவே உருவாக்கப்படும் இந்தக் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் கிடைக்கும் வருவாயை வறுமை நிலையில் உள்ள சக மாணவர்களின் கற்றல் தேவைகளுக்குக் கொடுத்து உதவலாம். பாடசாலைச் சுற்றாடல் பராமரிப்பில் உதவலாம்.

மாணவர் ஒருவர் கூட்டுறவு அமைப்புகளில் சேவையாற்றுவதன் மூலம் சிறுவயதில் இருந்தே சமூகத்துடன் கூட்டுறவாக வாழ்கின்ற உயர்ந்த விழுமியத்தைக் கற்றுக் கொள்ள முடியும். சிறந்த நிதிநிர்வாகியாகவோ வணிக முகாமைத்துவத்தில் விற்பன்னராகவோ ஆகுவதற்கான ஆற்றலை விருத்தி செய்ய முடியும். இப்படிப் பன்முக ஆற்றல்களை மாணவர்களிடையே விதைக்கக்கூடிய கூட்டுறவு அமைப்புக்களைப் பாடசாலைகளில் உருவாக்குவதற்குக் கூட்டுறவுத் திணைக்களத்தோடு, கல்வித் திணைக்களமும் இணைந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் மாகாணசபை உறுப்பினர்கள் சு.பசுபதிப்பிள்ளை, ப.அரியரத்தினம், விவசாய அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள். (2)




# தபால் மூலம் வாக்களிப்பதற்கு தவறியவர்களின் கவனத்திற்கு


(கிளிநொச்சி)

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கும் திகதி நாளை வெள்ளிக்கிழமையுடன் முடிவு பெறுகின்றது.

இதற்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் 11,12, 13, 14 ஆகிய திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உதவித்தேர்தல் அலுவலகத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உதவித் தேர்தல் அலுவலகத்திலும் நேரடியாகச்சென்று தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும். எதிர்வரும் 11, 12 ஆகிய தினங்கள் முறையே சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமையாக இருந்தாலும் இந்த விண்ணப்பங்களினை ஏற்றுக் கொள்வதற்கான கருமபீடம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இதற்கான முடிவுத்திகதி எதிர்வரும் 14 ஆம்திகதி செவ்வாய்க்கிழமையாக இருப்பதால் அதற்கு முன்பாக தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியானவர்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாயினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு தேர்தல் அலுவலகங்களில் விண்ணப்பங்களை நேரடியாகச் சமர்ப்பிக்க முடியுமென கிளிநொச்சி மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் ஆர் .சி .அமல்ராஜ் அறிவித்துள்ளார்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் தபால்மூலம் வாக்களிக்கும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-254)



கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் சாரதியாக கடமை புரியும் எஸ்.நகுலேஸ்வரனின் வைத்திய சத்திர சிகிச்சைக்கு அகில இலங்கை அரச சாரதிகள் சங்கம் அண்மையில் நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த நிதி உதவிக்கான காசோலை வழங்கும் நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட சாரதிகள் சங்க தலைவர் எஸ்.பிரசன்னா, யாழ்.மாவட்ட தலைவர் ஆர்.ஸ்ரீராம், பொருளாளர் எஸ்.செல்வகுமார் ஆகியோரை படத்தில் காணலாம்.

# பனை அபிவிருத்தி வாரம் 22 - 28 வரை பிரகடனம்

## மாணவர்களும் கடைப்பிடிக்க ஏற்பாடு

(மல்லாவி)

வடக்கு மாகாண பனை அபிவிருத்தி வாரத்தை முன்னிட்டு வடக்கு மாகாணக்கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற அனைத்து பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களிடையே பனை அபிவிருத்தி வாரத்தை கொண்டாடும் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் (கல்வி) சீ.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில அவர் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் எதிர்வரும் 22 ஆம்திகதி புதன்கிழமை தொடக்கம் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையிலான ஒருவார காலப்பகுதி வடக்கு மாகாண பனை அபிவிருத்தி வாரமாக பிரகடனப்படுததப்பட்டுள்ளது.

எனவே வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்கள் பனை அபிவிருத்தி வாரத்தினை கடைப்பிடிப்பதுடன் பனை வளம் தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்ள அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்குமாறு அவர் அனைத்து வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (2-15)

# மாணவிகள் 3 பேரும் பொலிஸாரால் மீட்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிளி/பாரதி வித்தியாலயத்தில் தரம்-IIஇல் கல்வி பயின்று வருகின்ற 3மாணவிகள் கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைக்கு சென்றிருந்த நிலையில் வீடு திரும்பவில்லையென கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து துரிதமாக செயற்பட்ட பொலிஸார் வவுனியா நெடுக்குளத்தில் மாணவி ஒருவரின் உறவினர் வீட்டில் மூவரும் தங்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி பாடசாலையில் க.பொ.தவில்(சா/த) கல்வி பயின்ற நிலையில் கடந்த 6ஆம் திகதி பாடசாலைக்குச் செல்வதாக கூறிவிட்டு வீட்டில் இருந்து புறப்பட்டவர்கள் பாடசாலைக்கும் செல்லாது வீடும் திரும்பாத நிலையில் பெற்றோரால் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது.

இம்முறைப்பாட்டை அடுத்து துரிதமாக செயற்பட்ட பொலிஸார் மாணவிகள் தொடர்பான விடயத்தினை அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை வவுனியா பொலிஸாரினால் வவுனியா நெடுக்குளத்தில் மாணவி ஒருவரின் உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டு அங்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேற்படி மாணவிகளிடம் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தில் இயங்கும் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் அன்றையதினமே மாணவிகள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புலி மீசை மருந்து!

கொரியாவின் லூன் மலைத் தொடரில் துறவி ஒருவர் இருந்தார். மிகச் சிறந்த ஞானி. மந்திர தந்திரங்களிலும் திறமையானவர். ஆயிரமாயிரம் மனிதர்கள் அவரிடம் அறிவுரை பெறுவதற்காக வருவார்கள்.

ஒருநாள் அவரைப் பார்ப்பதற்காக ஒரு பெண் வந்தாள். என் கணவர் என்னை வெறுக்கிறார். அவர் என் மீது அன்பு கொள்ளும்படி செய்ய வேண்டும் என்று வேண்டினாள்.

துறவி அப்படி அவர் உன்னை வெறுப்பதற்கான காரணம் என்ன? என்று கேட்டார்.

என் கணவர் போருக்குச் செல்வதற்கு முன்பு என் மீது மிகவும் அன்பு செலுத்தினார். என் வேலைகள் எல்லாவற்றிலும் உதவி செய்தார். ஆனால் மூன்று வருடங்கள் கழித்துத் திரும்பி வந்திருக்கும் அவர் வெறுப்புடனும் விரக்தியுடனும் இருக்கிறார் என்று விளக்கினாள்.

இதெல்லாம் போருக்குச் சென்றதால் ஏற்பட்ட விளைவுதான் என்றார் துறவி.

அவர் என் மீது மீண்டும் அன்பு கொள்ளும்படி செய்வதற்கு நீங்கள் மருந்து தருவீர்கள் என்று கேள்விப்பட்டேன் என்றாள்.

அப்படி ஒரு மருந்தைச் செய்ய என்னால் முடியும். நிறையப் பொருட்களைச் சேர்த்துத்தான் அந்த மருந்தைச் செய்ய வேண்டும். ஆனால் மிக அவசியமாகத் தேவைப்படும் ஒரு பொருள் மட்டும் என்னிடம் இல்லை என்றார் துறவி.

அது என்ன என்று சொல்லுங்கள் நான் கொண்டு வந்து தருகிறேன் என்றாள் அவள்.

புலியின் மீசையில் இருந்து ஒரே ஒரு ரோமம் வேண்டும் என்றார்.

சரி எப்பாடுபட்டாவது கொண்டு வருகிறேன் என்று உறுதி அளித்து விட்டு அவள் புறப்பட்டுச் சென்றாள்.

அடுத்தநாளே அவள் புலியைத் தேடிச் சென்றாள். காட்டுக்கு அருகில் உள்ள நதியின் கரையில் ஒரு புலியைக் கண்டாள். அவளைப் பார்த்த புலி உறுமியது. உடனே பயந்து பின்வாங்கினாள் அவள்.



முதல் நாள் புலியைக் கண்ட அதே இடத்துக்கு அடுத்த நாளும் சென்றாள். அவளைப் பார்த்து புலி மீண்டும் உறுமியது. மறுபடியும் அவள் பின்வாங்கிச் சென்றாள்.

இப்படி தினமும் அவள் அந்த இடத்துக்குச் சென்றதால் புலிக்கு அவளது அண்மை பழகிவிட்டது. அது உறுமுவதை நிறுத்தியது. அவள் அந்தப் புலிக்கு உணவு கொண்டு வந்து கொடுத்தாள்.

நாட்கள் செல்லச் செல்ல புலி அவளிடம் நட்புடன் பழகத் தொடங்கியது. அவளிடம் இருக்கும் உணவுப் பொருளைப் பெற்றுக் கொள்வதற்காக மிக நெருக்கமாக வந்தது.

ஒருநாள் இவள் அச்சத்துடனேயே புலியின் தலையைத் தடவினாள்.

சில நாட்கள் கழித்து புலியின் கன்னப் பகுதிகளில் வருடினாள். அப்படி ஒரு நாளில் அவள் மிகத் திறமையாக புலியின் மீசை ரோமங்களில் ஒன்றைப் பறித்தாள்.

அந்த ரோமத்தை எடுத்துக் கொண்டு துறவியிடம் ஓடினாள். அவள் துறவியைப் பார்த்தவுடன் எனக்கு கிடைத்து விட்டது என்று வெற்றிக் கூச்சலிட்டாள்.

நல்லது என்றார் துறவி.

அந்த ரோமத்தை எடுத்துச் சென்று அடுப்புத் தீயில் எறிந்தார்.

ஓ நீங்கள் என்ன இப்படி செய்து விட்டீர்கள்! என்று பதற்றத்துடன் கேட்டாள் அவள்.

இந்த மீசை ரோமத்தைக் கொண்டு அற்புத சக்தியுடைய மருந்து தயாரித்து தருகிறேன் என்று தானே சொன்னீர்கள்?

உனக்கு அந்த மருந்து தேவையில்லை பெண்ணே. புலியின் அன்பை நீ எப்படிச் சம்பாதித்தாய்?

அன்பான செயல்கள் மூலமும் மிகவும் பொறுமையாக இருந்ததன் மூலமாகவும் தானே? அப்படி என்றால், ஒரு மனிதன் புலியைவிட மோசமாகவா நடந்து கொள்வான். புலியின் அன்பை நீ பெற்றது போலவே கணவனின் நேசத்தையும் பெற முயற்சிசெய்! என்று துறவி மென்மையாகச் சொன்னார்.

அவரின் வார்த்தைகளில் உள்ள உண்மையை உணர்ந்து நன்றி சொல்லி விடைபெற்றாள் அவள்.

## 09 07.2015 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 455 - அவிட்டஸ் மேற்கு உரோமப் பேரரசின் மன்னனானான்.
- 1357 - புனித உரோமப் பேரரசர் நான்காம் சார்ல்ஸ் பிராகா நகரத்தில் சார்லஸ் பாலத்திற்கு அடித் தளம் நாட்டினார்.
- 1755 - பென்சில்வேனியாவில் பிரெஞ்சு மற்றும் குடியேற்ற துணை இராணுவக் குழு பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1790 - பால்ட்டிக் கடலில் இடம்பெற்ற மோதலில் சுவீடனின் கடற்படையினர் ரஷ்யக் கப்பல்களை பெரும் எண்ணிக்கையில் கைப்பற்றினர்.
- 1810 - ஒல்லாந்து நாட்டை நெப்போலியன் தனது பிரெஞ்சு இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டான்.
- 1816 - ஆர்ஜென்டீனா ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர் ஹட்சன் துறைமுகம் மீதான தாக்குதல் முடிவுக்கு வந்தது.
- 1868 - அனைத்து ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கும் முழுக் குடியுரிமை வழங்கும் சட்டமூலம் ஐக்கிய அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்டது.
- 1900 - ஆஸ்திரேலிய கண்டத்தில் தனித்தனியே குடியேற்ற நாடுகளாக இருந்த மாநிலங்கள் ஆஸ்திரேலியப் பொதுநலவாயத்தின் கீழ் ஒன்றிணைக்க விக்டோரியா மகாராணி ஒப்புதல் அளித்தார்.
- 1903 - யாழ்ப்பாணத்தில் இந்து வாலிபர் அமைப்பு (YMHA) உருவாக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர் நேச நாடுகள் சிசிலி மீதான தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1948 - பாகிஸ்தான் தனது முதலாவது அஞ்சல் தலையை வெளியிட்டது.
- 1991 - 30 ஆண்டுகளின் பின்னர் தென்னாபிரிக்கா ஒலிம்பிக் விளையாட்டுக்களில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.
- 1995 - யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் இலங்கை இராணுவத்தின் முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.
- 2002 - ஆபிரிக்க ஒன்றியம் அடிஸ் அபாபாவில் அமைக்கப்பட்டது. தென்னாபிரிக்க ஜனாதிபதி தாபோ உம்பெக்கி இவ்வமைப்பின் முதலாவது தலைவரானார்.

2006 - 2006 உலகக் கிண்ணக் காற்பந்துப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இத்தாலி பிரான்சை வென்று நான்காவது தடவையாக உலகக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

2006 - அக்னி III ஏவுகணை ஒரிசாவில் சோதிக்கப்பட்டது. அதன் இரண்டாவது அடுக்கு இயங்க மறுத்தமையால் குறுகிய தூரத்தையே சென்றடைந்தது.

### பிறப்புகள்

- 1929 - ஏ. எம். ராஜா, பின்னணிப் பாடகர் (இ. 1989)
- 1930 - கே. பாலச்சந்தர், தமிழ் திரைப்பட இயக்குநர

### இறப்புகள்

- 2008 - சி. ஆர். கண்ணன், தமிழக எழுத்தாளர்

## கே.பாலச்சந்தர்



கே.பாலச்சந்தர் எனப் பொதுவாக அழைக்கப்படும் கைலாசம் பாலச்சந்தர் 1930 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி பிறந்தார். இவர் தமிழ்த் திரைப்பட இயக்குநர் ஆவார். இவர் மேடை நாடகத்துறையிலிருந்து திரைத்துறைக்கு வந்தவர். திரைத்துறையில் 1965 ஆம் ஆணடு வெளியான நீர்க்குமிழி இவரது முதல் இயக்கமாகும். நாகேஷ் இதில் கதாநாயகனாக நடித்தார் .

இவருடைய பெரும்பாலான படங்களில், மனித உறவு முறைகளுக்கு இடையிலான சிக்கல்கள், சமூகப் பிரச்சினைகள் ஆகியவையே கருப்பொருளாய் விளங்கின.

அபூர்வ ராகங்கள், புன்னகை மன்னன், எதிர்நீச்சல், வறுமையின் நிறம் சிகப்பு, உன்னால் முடியும் தம்பி முதலியன இவர் இயக்கிய சிறந்த படங்களில் சிலவாகும். தமிழ்த் திரையுலகின் முக்கிய நடிகர்களான கமல் ஹாசன் மற்றும் ரஜினிகாந்தை அறிமுகம் செய்தவர். 1990 களுக்குப் பிறகு கையளவு மனசு போன்ற பெரும் வரவேற்பை பெற்ற தொலைக் காட்சித் தொடர்களையும் இயக்கினார்.

"கவிதாலயா" என்னும் திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தையும் நிறுவினார். இதன் மூலமாக பிற இயக்குநர்களின் கைவண்ணத்தில் பல திரைப்படங்களை அளித்துள்ளார். அவற்றில் நெற்றிக்கண், ராகவேந்தர், சிவா ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவருக்கு 1987ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது கொடுக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டுக்கான தாதாசாகெப் பால்கே விருதுக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 234

## அஹங்காரத்தை விடுதல்



...ஆனால் அரசரின் ஆலோசகரான ஜென் துறவியோ மன்னனைப் பார்த்து சிரிக்க ஆரம்பித்தார். அவர் கேட்டார், "நீ உன்னுடைய கற்க் கோட்டைகளுக்காக போர்க்களங்களில் சண்டையிட்டு, உன் தூக்கத்தைத் தொலைக்கும் பொழுது, இந்தச் சிறுவர்கள் மணற்கோட்டைக்காக சண்டையிடுவதைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய்?"

நமது எல்லா கடுமைத்தனமுமே வெறும் மணற்க் கோட்டைகளுக்குத் தான்! அதைப்புரிந்து கொள்ளுங்கள். குழந்தைக்கு, அந்தச் சிறுவயதில், மணற்கோட்டைகள் விலைமதிப்பற்றதாகத் தோன்றுகிறது. நமக்கோ, இந்த வயதில் கற்கோட்டைகள் விலைமதிப்பற்றதாக தோன்றுகிறது அவ்வளவுதான். அது மணற்கோட்டையோ அல்லது கற்கோட்டையோ, அதன் பின்னால் இருக்கும் கடுமைத் தனம் ஒன்றுதான். அதற்குக் காரணமான பொருள் தான் வேறு. அதனால் குழந்தைகள் மணற்கோட்டைக்கு சண்டையிட்டால் சிரிக்காதீர்கள்.

கடுமைத்தனம், வாழ்க்கையின் திறந்த தன்மைக்கும் சுதந்திரத்திற்கும் உங்கள் மனதை மூடி விடுகிறது. அது உங்களை மந்திரமாகவும், உயிரற்றதாகவும் ஆக்கிவிடுகிறது. அது உங்கள் சிந்தனையைத் தடை செய்து, உங்களுக்கு எப்பொழுதும் தெரிந்த, பழக்கமான வடிவ அமைப்புக்களிலேயே உங்களை ஒட்டிக் கொண்டிருக்குமாறு செய்துவிடுகிறது.

ஒரு ஜென் மடாலயத்தில், சீடர்களுக்கிடையே, யாரிடத்தில் இருப்பது சிறந்த தோட்டம் என்று ஒரு போட்டி வந்தது. அதில் ஒரு சீடன் மிகவும் கடுமையான வகையைச் சேர்ந்தவன். அவன் இந்தப் போட்டியையும் மிகவும் கடுமையாக எடுத்துக் கொண்டு விட்டான். எப்பொழுதும் அவன் தோட்டத்தை நன்றாகப் பெருக்கி, நேர்த்தியாகவும், சுத்தமாகவும் வைத்திருந்தான். புற்கள் எல்லாம் ஒரே உயரத்திலிருந்தன. எல்லாப் புதர்களும் நேர்த்தியாக வெட்டிவிடப்பட்டு இருந்தன. அவன் நிச்சயமாக முதற் பரிசைப் பெற்று விடுவோம் என்ற நம்பிக்கையில், இருந்தான். போட்டி நாளன்று குரு எல்லாத் தோட்டங்களையும் சுற்றி வந்தார். பிறகு திரும்பி வந்து எல்லாத் தோட்டங்களையும் வரிசைப் படுத்தினார். அந்த சீடனுடைய தோட்டம் கடைசி இடத்தையே பெற்றிருந்தது. எல்லோருக்கும் அதிர்ச்சி சீடன் குருவிடம் சென்று அதைப் பற்றிக் கேட்டான், "குருவே என் தோட்டத்தில் என்ன தவறு இருக்கிறது? ஏன் எனக்கு கடைசி இடத்தைக் கொடுத்திருக்கிறீர்கள்?" குரு அவனைப் பார்த்துக் கேட்டார். "எங்கே அந்த இறந்த இலைகள்?" இது போன்று பராமரிக்கப்படும் தோட்டம் உயிரோட்டத்துடன் இருப்பதில்லை! அது உயிரற்றதாக இருக்கிறது.

கடுமைத் தன்மை தன்னிச்சையான இயல்பைக் கொன்று விடுகிறது. படைப்பாற்றலை அழித்து விடுகிறது.


நீங்கள் ஒரு வேலையைத் தளர்வாகவும், எளிதாகவும் எடுத்துக் கொண்டு செய்யும் பொழுது உங்களுடைய சிந்திக்கும் மற்றும் முடிவெடுக்கும் திறன் தானாகவே அதிகரிக்கின்றது என்று அறிவியல் நிரூபிக்கிறது. அதே வேலையைக் கடுமையான முறையில் எடுத்துக் கொண்டு செய்யும் பொழுது அது உங்கள் மனதை மந்தப்படுத்தி விடுகிறது.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# கருவாச்சி காவியம்

வைரமுத்து-183



விடிய்ய...

தோள்ல ஒரு கோழி; கையில ஒரு வாளி. புடிச்சு நடந்துட்டா பொடி நடையா.

ஆண்டிபட்டிச் சந்தைக்கு வந்தா.

மகனுக்கு ஒரு வெள்ளவேட்டி மஞ்சச் சட்டை-கோவப்பழ நெறத்துல மருமகளுக்கொரு சீல- சட்டிபான நெறத்துல பேரனுக்கொரு சட்டை-வெள்ளாவியில இல்ல... தீயில வச்சாலும் நெறம் மாறாத மாதிரி பச்சைப் பசேல்ன்னு பேத்திக்கொரு பாவாடை-மொத்தம் மூணேகால் ஆச்சு.

விசாரிச்சுக்க கார் ஏறிட்டா.

திருமங்கலம் வெலக்கு வந்தாச் சொல்லுங்கன்னு ஒருத்தர நம்பாம அஞ்சாறு பேருக்கு சொல்லி வச்சா.

திருமங்கலம் வெலக்குல எறங்கி மேனியெல்லாம் சொமை சுமந்து மனசெல்லாம் பாசம் சுமந்து கள்ளிக் கட்டாப்பு வழி ஒத்தையடிப் பாதை புடிச்சு ஒத்தையில போறாய்யா கருவாச்சி.

இன்னும் ஒரு கல்லுத் தொலைவு தான் இருக்கு என் உசிரப்பாக்க.

"வாரேண்டா மகனே வாரேன். இந்தா வந்துட்டேன்."

'ஒரு புது விருந்தாளு வருது' கரகரகரன்னு கத்தி உருக்குள்ள தகவல் சொல்லுது வாகை மரத்துக் காக்கா.

ஓடை கடந்து மேடேற, கொடிக் கள்ளிப் புதரோரம் கொட்டி வச்ச சாம்ப(ல்) மேட்டுல ஆடாம அசையாம ஒண்ண ஒண்ணு உர்ருன்னு பாத்துக் கிட்டே கழுதைக ரெண்டு நிக்குதுக காது வெடைக்க.

புங்க மரத்தடியில லாடம் அடிக்க மாட்டத் தரையில சாச்சுக்கிட்டிருந்தாக ரெண்டு மூணு ஆளுக.

"அய்யா! இங்க அழகு சிங்கம் வீடு எது? மேற்க சொக்கத்தேவன்பட்டிக்காரன். இந்த ஊர்ல கல்யாணம் பண்ணவன். சோலமலத் தேவரு மருமகன்...

கருவாச்சிய ஏற இறங்கப் பாத்துட்டு வாயில போட்டிருந்த வெத்தலைய முழுங்கவும் முழுங்காம துப்பவும் துப்பாமக் கொழ கொழங்கிற தமிழில வழி காட்டினான் ஒரத்தன்.

நடந்தா...

தோள்ல தொங்குற கோழிமாதிரியே செறகு துடிக்குது மனசு. இந்தா இருக்கு அரசமரம். அந்தா தெரியுது தண்ணிக்கெணறு. அந்தா தெரியுதில்ல வெள்ளாட்டங்குட்டி கட்டிக் கெடக்குற வேப்பம்மரம்.

"அத்தத் திண்ண வீடா எம்மகன் வீடு?"

'படக் படக்கு'ன்னு நெஞ்சு துடிக்கப் படியேறி உள்ள போனா.

உள்வீட்டுத்தாவாரத்துல திருகையில



கோப்பை திரிச்சுக்கிட்டிருந்தா ஒருத்தி. அட்டத்துல பாத்தா வத்திப் போன திம்சு மாதிரியே இருந்தா. அவதான் மருமகளோ?

வீட்டுக்குள்ள நெழைஞ்சதும் இடது பக்கமிருந்த உள் திண் ணையில 'தக்கிரி பிக்கிரி'ன்னு ஒளறிக் கிட்டு ஒரு உருவம் உக்காந்திருக்கு. ஒடம்பு சிறுத்துப் போனதுல மண்ட பெருத்துப்போச்சு அந்த உருவத்துக்கு. ஒரு காலத்துல நாங்களும் இங்க இருந்தமாக்கும்ன்னு சொல்லுறதுக்கு ரெண்டு மூணு முடியும் மிச்சமிருந்திச்சு தலையில. ஒழுகிக் கிட்டேயிருக்கு வாயில எச்சி. பொணத்துக்கு கண்தெறந்த மாதிரி ஒரு பார்வை. சுட்ட கோழி மாதிரி வெறச்ச வெளங்காமக் கெடக்கிற கால்ல சங்கிலி கட்டி வச்சிருந்தாக தூண்ல. இவளப்பாத்து அது 'ஈ'ன்னு இளிக்கவும் பயந்து ஓடி ஒதுங்கி உள்ள போயிட்டா கருவாச்சி

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறை நூலகமும் பிள்ளைமைய விழுமியமும்


**வகுப்பறை நூலகம் என்பதுஒரு வளம்.**

வகுப்பறையில் நூலகத்திற்கென ஒருபுத்தகஅலுமாரியினை ஒதுக்கி, மாணவர்களைக் கவரக் கூடியவகையில் அதனை வடிவமைத்து, ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ஒரு புத்தகத்தினைப் பெற்று இருப்பில் வைப்பதன் மூலம் வகுப்பறை நூலகம் ஒன்றினை அமைக்க முடியும். வசதியானவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களை நூலகத்திற்கு வழங்கமுடியும். புதிய நூலாக இருக்க வேண்டிய அவசியமில்லை! பாவனைக்கு உகந்ததாக இருந்தால் போதுமானது. அவர்களுடைய வகுப்பறை நூலகத்திற்கு அவர்கள் ஒரு பெயரையும் சூட்டமுடியும். இந்நூலகத்திற்கு நூலகப் பொறுப்பாளர் ஒருவரையும் நியமிக்கமுடியும். ஆனால், அவர் அதற்குப் பொருத்தமானவராக இருக்கவேண்டும்.

புத்தகங்களைக் காட்சிப்படுத்துவது என்பது ஒரு கலை. சரியான முறையில் புத்தகங்களைக் காட்சிப்படுத்துவதன் மூலம் மாணவர்களது வாசிப்பு ஆர்வத்தினையும் தூண்டமுடியும். இதனால் புத்தகங்களை வாசிக்காத மாணவர்கள் கூட அவற்றைவாசிக்க முனைவர். வாசிக்கத் தொடங்கிவிட்டால் பின்னர் அதன் பயனறிந்து வாசிப்பினைத் தொடர்ச்சியாக மேற்கொள்வர். மேலும் புத்தகங்களின் மதிப்பினையும் உணர்ந்து அவற்றைப் பேணவும், மென்மேலும் தேடிக்கற்கவும் ஆரம்பிப்பர்.

நூலகத்திற்குச் செல்லச் சோம்பற்படும் மாணவர்கள் கூட வகுப்பறை நூலகத்தினைப் பயன்படுத்துமுனைவர். இதனால் மாணவர்கள் வாசிப்புவீதமும், அதன் பேறாய்ப் பயன்களும் அதிகரிக்கும்.

மேலும் அவர்கள் வாசித்த புத்தகத்திலிருந்து அவர்கள் பெற்றுக்கொண்டவை பற்றி அவர்களுடன் கலந்துரையாடுவதன் ஊடாகத் தற்காலத்தில் அதுபயனற்றுப் போய்விடும் என்பதனை உணர்ந்து திட்டங்களின் தொடர்ச்சியினைப் பேணமுற்படலும், பின்னூட்டலும் பண்ணுவதன் மூலம் அவர்களது அற உணர்வினையும், மனிதாபிமானத்தினையும் கூடக் கட்டியெழுப்ப முடியும். பண்டைய நூல்களை அவசிய தேவையாகவுள்ள ஒழுக்க விழுமியங்களையும், கலாசாரத்தினையும் கூடக் கட்டியெழுப்பமுடியும்.



விழுமியக் கல்வி பற்றிய விழிப்புணர்வு சமுதாயத்தில் மேலோங்கியுள்ள போதிலும், அது தொடர்பான நூல்கள் வெளியிடப்பட்டு (பெங்களூர் அப்போஸ்தலிக்க கார்மல் சபையின் கல்வி ஆய்வுக் குழுவினால் ஆங்கிலத்தில் ஆக்கப்பட்டஅந்நூல் திருகோணமலை புனிதமரியாள் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்செல்வி திரேஸ்ராணி அவர்களதும், அவர்களது குழுவினரதும் முயற்சியால் தமிழ்மொழியாக்கம் செய்யப்பட்டு இங்கு அறிமுகம் செய்யப்பட்டது) மாணவர்களுக்கு வழங்கப்பட்ட போதிலும் அதனைத் தொடர்ச்சியாகச் செயற்படுத்தாமை காரணமாக முன்னெடுக்கப்பட்டதன் பயனைத் தொடர்ச்சியாகக் காணமுடியவில்லை என்பதனையும் இங்குகவனத்திற் கொண்டு, எத்திட்டமும் தொடர்ச்சியான கண்காணிப்பு,மேற்பார் வைக்குட்படுத்தப்படாவிட்டால் அதுபயனற்றுப் போய்விடும் அவசியம்.

பாடசாலைகளில் வெறுமனே பாடப்பரப்பினை மட்டுமன்றி பண்பாட்டினையும் கற்றுத் தரவேண்டும். சமாதானக்கல்வியும் முரண்பாடு தீர்வு கட்கானகல்வியுமே இன்றுமிகவும் அத்தியாவசியமானதான காலமிது. எனவே மாணவர்களது பாடநேரத்திற்குள் ஒவ்வொருநாளும் பத்து நிமிட நேரமாவதுஅவர்கள் "விழுமியக்கல்வி" பற்றிஅறியச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும். அவ்வாறான நூல்களைஅவர்களைப் கொண்டேவாசிப்பித்து அதுபற்றிய அவர்களது கருத்து வெளிப்பாடுகளைச் வெளிப்படுத்தச் செய்துஅவர்கள் மூலமே அவர்களது தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தமுடியும். பிள்ளை - பிள்ளை மூலமும் கற்கமுடியும். "விழுமியக்கல்வியானது வழுநீக்கும் கல்வி" என்பதனையும் உணர்த்தவேண்டும்.

இதற்குநாம் மாணவர்களைப் பண்டைய அந்நூல்களை வாசிக்கப் பண்ணுவதன் மூலம் இன்றையதலைமுறை விளங்கிக் கொள்ளும் வகையிலும், அவர்கள் 'ஏற்றுக்கொள்ளும்' விதத்தி லும்,"மீளமைத்துக் கொடுத்தல்"நலம் பயக்கும். இதன் மூலம் பொறாமை,வஞ்சகம், தற்புகழ்ச்சி, இயலாமை, அவநம்பிக்கை தாழ்வு மனப்பான்மை, இகழ்ச்சி போன்ற இன்னோரன்ன எதிர்மறை எண்ணங்களையும் எம் சிறார் மனதிலிருந்து அகற்ற முடியும். மனித நேயத்தினையும், விழிப்புணர்வினையும் ஏற்படுத்த முடியும்.

முக்கியமாக வாள்வெட்டுக் கலாசாரம், வன்புணர்வுக் கலாசாரம், குழுக்கள் ஸ்தாபிக்கும் கலாசாரம் இவற்றையும் படிப்படியாகக் குறைக்க முடியும். மேற்குறிப்பிட்ட வற்றை மேற்கொள்வோரும் மனிதர்களே.

ஆனால் இதற்கெல்லாம் அவர்கள் வாழும் சூழற்பிழைகள்,கல்வியறி வற்றதன்மை, வளர்ப்புப் பிழைகள், மனத்தாக்க ங்கள்,அறம் எதுஅல்லது எது என்ற தெளிவின்மைகள், இல்லாமையின் தாக்கங்கள், இயலாமையின் மனக்குறைகள், அவர்களது சமூக கலாசாரப் பின்னணிச் சார்புகளே காரணங்களாகின்றன. இவற்றை நீக்குவதற்கு"அடிப்படையில்"மாற்றம் தேவை. அரசாங்கமும், சமூக மும்,தொண்டு நிறுவனங்களும், தனிமனிதரும் அவர்களது வாழ்க்கையின் அடிப்படைத் தன்மையிலேயேமாற்றம் கொண்டுவர முனைய வேண்டும்.

இதன் மூலம் அவர்களை இரட்சித்து மனிதராக்க முடியும். இதற்கெனத் தனியானதிட்டம் வேண்டும்.

• முக்கியமாகப் பெற்றோரே ஒரு குழந்தையின் நடத்தைக்குக் காரணமாகின்றனர். "சேற்றில் கூடச் செந்தாமரைமலரா"முடியும். பெற்றோரின் சரியான பராமரிப்பும், வழிகாட்டலுமே ஒரு குழந்தையின் குணநலனை யும், எதிர்காலத்தையும் தீர்மானிக்கின்றன. எனவே பெற்றோரும் மற்றோரும் ஒவ்வொரு குழந்தையினதும் எதிர்காலத்திற்கான அடிப்படைகளை மாற்றியமைக்க முன்வர வேண்டும். அதற்காய் வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவித்து, விழுமியக் கல்வியினையும் வழங்கவேண்டும்.

இன்றைய குழந்தைகளும், இளைஞர்களுமே எமது நாட்டின் எதிர்காலச் சிற்பிகள். வாசிப்பின் மூலம் பிள்ளைமைய விழுமியத்தினையும் செயற்படுத்தி" வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்கும்" என்பதனை நாம் நிரூபித்து,நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்க வேண்டும்.

**செல்வமனோகரி**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் ஒருஇலட்சம் வேலை வாய்ப்புக்கள்

## முதலமைச்சர் அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

**கிழக்கு மாகாணத்தில் இரண்டு வருடத்திற்குள் ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பினை வழங்கவுள்ளதாக முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.**



கிழக்கு மாகாண சபையின் மிகுதியாக உள்ள 2 வருட ஆட்சியில் கிழக்கிலுள்ள 45 உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகையிலும் ஒவ்வொரு சபையின் எல்லைக்குள்ளும் இரண்டாயிரம் பேர் வீதம் 45 சபைகளுக்கும் 90ஆயிரம் ஆட்களை நியமிக்கவும், அதற்கான ஆளணிகளுக் கான இடங்களைத் தேர்வு செய்யவும் சபைகளின் செயலாளர்களுக்கு முதலமைச்சரினால பணிப்புரைவழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உள்ளூ ராட்சி மன்றங்களின் கண்காணிப்பிலும் ஒவ்வொரு (காமன் பெக் டரிகளை) ஆடைத்தொழிற்சாலை களை உருவாக்கி அதன் மூலம் 650 வேலையாட்களை நியமிக்கும் பணிகளுக்காக முதலீட்டாளர்களுடனும், தொழிற்சாலைச் சங்கத்தினரு டனும இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியில் முடிந்துள்ளதால் அவசரமாக அதற்கான வேலைகளை ஆரம்பிக்க உத்தர விடப்பட்டுள்ளன.

கிழக்கிலிருந்து ஒவ் வொரு வருடமும் 15ஆயிரம் பணிப் பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். அவர்களை அங்கு செல்வதை நிறுத்தும் வகையில் இத் தொழில் வாய்ப்பின் மூலம் முற்றாக பணிப்பெண்கள் வெளிநாடு செல்வதை நிறுத்திவிடலாம்.

வறுமை நிலையினை முடிவுக்குக் கொண்டுவந்து வாழ்வாதாரத்தைக் கூட்டலாம் என்ற நல்ல நோக்கோடு அத்தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தும்.

அந்தவகையில் கிழக்கு மாகாணத்தில் வழங்கப் படவுள்ள இத்தொழில் வாய்ப்புக்கள் மூலம் கிழக்கில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்படுவதுடன், சுபீட்சமான வாழ்வியலுக்குள் மக்கள் திரும்பி விடுவர் என்ற நல்லெண்ணம் முழுமையாக இருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார். இத்திட்டத்துக்கு கிழக்கில் உள்ள அனைவரும் ஒன்றுபட்டு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் அழைப்பு விடுக்கிறேன் என்றும் கேட்டுக்கொண்டார்.

கிழக்கு மாகாண சபையின் ஆட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையில் கூட்டாட்சியாக இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக ஹாபிஸ் நஸீர் அஹமட் பதவி பொறுப் பேற்று 5 மாத காலத்தில் கிழக்கு மாகாணத்தில் நிரந்தர நியமனம் 1500 பேருக்கு மேல் கொடுக்கப்பட்டுள்ளதுடன், தற்காலிக நியமனம். 500 பேருக்கு மேல் கொடுக்கப்பட்டுள்ளது.


தனியார் துறையில் 1000 பேருக்கு மேல் வேலைவாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 300 |
| தக்காளி | 100 | 120 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 60 | 60 |
| கோவா | 120 | 100 | 80 | 90 |
| கரட் | 120 | 150 | 240 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 80 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 180 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | — | 100 |
| பயற்றங்காய் | 80 | 60 | 60 | 70 |
| லீக்ஸ் | 100 | 150 | 140 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 120 | 180 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 300 | 200 | 300 |
| போஞ்சி | 200 | 150 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 200 | 140 | — | 120 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 280 | 160 |
| முள்ளங்கி | 40 | 50 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 426

மது மதுமிதா




பாலன் குமார்




கடவுள் : மனிதா உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்?

மனிதன் : இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ரோட்டு போட்டுக் கொடு சாமி

கடவுள் : அது கஷ்டமாச்சே கடல்ல எப்பிடிப்பா ரோட்டு போட முடியும் வேறு ஏதாவது கேள்

மனிதன் : அப்ப என் மனைவி பேச்சைக் குறைக்கணும் நான் சொல்லுறதை மட்டும்தான் கேட்கணும் எதிர்த்துப் பேசக் கூடாது அப்படி செய்யுங்க சாமி

கடவுள் : அமெரிக்காவுக்கு ரோடு சிங்கிளா டபுளா?

மிது மிதுர்சா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்வானி ஊதிய அபாயச் சங்கு!

1975 ஆம் ஆண்டு ஜூன் 25 இல் பிரதமர் இந்திரா காந்தி நெருக்கடி நிலையை அறிவித்தார். அதன் 40 ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி பா.ஜ.க.வின் மூத்தத் தலைவரான அத்வானி, 'தற்போதையக் காலகட்டத்தில் அரசியல் சட்டம், சட்டத் திட்டங்களுக்கான பாதுகாப்பு முறைகள் இருந்தாலும் கூட, ஜனநாயகத்தை அழிக்கிற சக்திகள் வலிமை பெற்றிருக்கின்றன.

தற்போது உள்ள அரசியல் தலைமை முதிர்ச்சியற்றதாக இருக்கிறது. நெருக்கடி நிலையை மீண்டும் கொண்டுவந்து மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பது அறவே இல்லையென்று சொல்லிவிட முடியாது.

எந்தவொரு தாக்குதலிலிருந்தும் ஜனநாயகம் பாதுகாக்கப்படும் என்ற உறுதியை எனக்கு வழங்குகிற சிறப்பான தன்மை இன்றைய அரசியல் தலைமையிடம் குறைவுபட்டுள்ளது.

நெருக்கடி நிலை காலகட்டத்திலிருந்து இன்றுவரை மனித உரிமைகள் மீண்டும் நிறுத்திவைக்கப்பட மாட்டாது என்றோ அழிக்கப்பட மாட்டாது என்றோ வாக்குறுதிகள் அளிக்கும் வகையில் எதுவும் நடைபெறவிருப்பதாக நான் கருதவில்லை.

அப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போதுதான், பத்திரிகைகள் எந்த அளவுக்கு உண்மையான அக்கறையுடன் செயறபடும் என்பது தெரியவரும். இப்போதைக்கு, நீதித் துறைதான் இந்திய ஜனநாயகத்தின் நம்பிக்கை ஆகும்' என்று கூறியுள்ளார்.

பா.ஜ.க.வில் மட்டுமல்ல, இந்திய அரசியலில் மிக மூத்தத் தலைவர்களில் அத்வானியும் ஒருவர் ஆவார். நெருக்கடி நிலை மீண்டும் வராது என்று சொல்வதற்கில்லை என அவர் ஊதியுள்ள அபாயச் சங்கு நாடெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

1975 இல் எத்தகைய சூழ்நிலையில் நெருக்கடி நிலையை இந்திரா காந்தி கொண்டு வந்தார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, இன்றைக்கு அத்தகைய சூழ்நிலை மெல்ல உருவாகிக் கொண்டிருப்பதை உணர முடிகிறது.

இந்திரா காந்தி நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்றும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளுக்கு அவர் போட்டியிடுவதை ஆறு ஆண்டுகளுக்குத் தடை செய்தும் அலாகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி ஜக்மோகன் லால் சின்ஹா 1975 ஆம் ஆண்டு ஜூன் 12 இல் தீர்ப்பளித்தார்.

பிரதமர் பதவியிலிருந்து இந்திரா காந்தி உடனடியாக விலக வேண்டும் என நாட்டில் உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் வற்புறுத்தின. பதவியில் தான் தொடர்வதற்காக நெருக்கடி நிலையை அறிவித்தாக வேண்டிய அவசியம் இந்திராவிற்கு ஏற்பட்டது.


ஜெயப்பிரகாஷ் நாராயண் உள்பட எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல தலைவர்களும் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

கைதிலிருந்து தப்பி நாடாளுமன்றத்திற்குள் இரகசியமாகப் புகுந்த நாடாளுமன்ற தி.மு.க.வின் தலைவராக இருந்த இரா.செழியன், நெருக்கடி நிலைக்கு எதிராக அங்கு பின்வருமாறு முழங்கினார்:-

'1971 டிசம்பர் 2 ஆம் தகதி, பிரதமரின் அறைக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் அழைக்கப்பட்டனர். பாகிஸ்தான் படையெடுப்பால் ஏற்பட்டுள்ள சூழ்நிலை எங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

அவசரகாலச் சட்டம் போட வேண்டிய தன் கட்டாய நிலை விளக்கப்பட்டது.

அதற்கு அடுத்த நாள், நாடாளுமன்றத்தில் தீர்மானம் வந்தபொழுது, அனைவரும் ஒருமனதாக ஒப்புதல் தந்தனர். இந்தத் தீர்மானத்தை முன்வைத்து மத்திய அமைச்சர் கே.சி. பந்த் பேசும்போது, அவசரகால அதிகாரம் அவசியமில்லாமல் பயன்படுத்தப்பட மாட்டாது. அரசியல் காரணங்களுக்காகப் பிரயோகம் செய்யப்பட மாட்டாது. குறித்த தேவைக்கு மேல் ஒரு நாள்கூட நீடிக்காது என்று வாக்குறுதி தந்தார். வாக்குறுதி என்னவாயிற்று?



போர் 14 நாள்களில் முடிவடைந்தது. சுதந்திர வங்கம உருப்பெற்றது. ஒரு கோடி அகதிகள் தங்கள் நாட்டுக்குத் திரும்பினர்.

போர் நிலைமை நீங்கியது. சிம்லா அமைதி உடன்பாடு வந்தது. இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிடையே போக்குவரத்துத் தொடங்கியது. வர்த்தக உடன்பாடு ஏற்பட்டது. நல்லெண்ணக் குழுக்கள் பரிமாறப்பட்டன. இவ்வளவுக்குப் பிறகும் அவசரகாலம் மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாக நீண்டு விட்டது.

அவசரகாலத்தின் பேரில் எடுத்துக் கொள்ளப்பட்ட அதிகாரங்களைக் கைவிட மத்திய அரசு மறுக்கிறது. அவசரகாலத்தை நீக்கி, பழைய உரிமைகளை மீண்டும் தருமாறு, நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு தொடர் கூட்டத்திலும் நாங்கள் கேட்டு வருகிறோம். அதற்குப் பதில், இருந்த அவசரகால நிலைக்கு மேல், இன்னோர் அவசரகால நிலைமையை அமல்படுத்தியதுதான்' எனக் குறிப்பிட்டார்.

உள்நாட்டுப் பத்திரிகைகளில் அவரது பேச்சு இருட்டடிப்பு செய்யப்பட்டாலும், வெளிநாட்டுப் பத்திரிகைகளில் பரபரப்பாக வெளியானது. தலைமறைவாக இருந்த தொண்டர்கள் அவரது பேச்சைக் கோடிக்கணக்கில் அச்சடித்து இந்தியாவெங்கும் மக்களிடையே பரப்பினார்கள். செழியனின் பேச்சு இருண்ட வானத்தில் மின்னல் ஒளிபோல மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியது.

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக சுதந்திரப் போராட்டம் தீவிரமாக இருந்த காலத்தில் கூட 1944 இல் வங்காளத்திலும், மும்பையிலும் மட்டுமே நெருக்கடிநிலை அமலுக்குக் கொண்டுவரப்பட்டதே தவிர, நாட்டின் பிற பகுதிகளில் கொண்டுவரப்படவில்லை.

காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்டு நாடெங்கும் பெரும் பதட்டம் உருவான காலத்தில்கூட அப்போது பிரதமராக இருந்த நேரு நெருக்கடிநிலைச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை.

இந்திரா காலத்தில் நிலவிய சூழ்நிலை பிரதமர் மோடியின் காலத்திலும் நிலவுகிறது.

1.அமைச்சரவையின் அனைத்து அதிகாரங்களும் பிரதமரின் செயலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. அமைச்சர்களின் துறைகளுக்கு உயர் அதிகாரிகளை பிரதமரின் செயலகமே நியமித்தது.

இதன் விளைவாக, அமைச்சர்களுக்குத் தெரியாமலேயே அவர்களின் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளின் மூலம் பிரதமர் செயலகம் ஆணைகளைப் பிறப்பித்தது. அமைச்சர்கள் வெறும் பொம்மைகளாக இருக்கின்றனர். முன்னாள் பிரதமர் இந்திரா காலத்தில் தொடங்கப்பட்ட இந்த முறைகேடு மோடியின் காலத்திலும் தொடர்கிறது.

2.இந்திராவின் காலத்தில் அவரது கொள்கைகளுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட அதிகார வர்க்கம் உருவாக்கப்பட்டது. இப்போது மோடியின் காலத்திலும் அது தொடர்கிறது.

3.காங்கிரஸ் கட்சிக்குள் மூத்தத் தலைவர்களை இந்திரா ஒதுக்கி காங்கிரசைப் பிளந்து தனக்கென ஒரு காங்கிரசை உருவாக்கிக் கொண்டார்.

பா.ஜ.க.வின் மூத்தத் தலைவர்களையும் மோடி ஒதுக்கி வைத்திருக்கிறார். கட்சிக்குத் தலைவராகத் தனது நெருங்கிய தோழரான அமித் ஷாவை நியமித்து கட்சியையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார்.

4.காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் இந்திராவிற்கு விசுவாசமாக நடந்துகொள்வதன் மூலமே பதவிகள் கிடைக்கும் என

நம்பினார்கள். மோடியின் புகழ் பாடுவதன் மூலமே அரசியலில் உயர முடியும் என்னும் போக்கு பா.ஜ.க.வில் பரவி வருகிறது.

5. 1971 டிசம்பரில் கிழக்குப் பாகிஸ்தான் மீது படையெடுத்து சுதந்திர வங்காளத்தை உருவாக்கியதன் மூலம் நவீன துர்க்கையாக இந்திரா போற்றப்பட்டார்.

அதே வழியைப் பின்பற்றி, பாகிஸ்தானுடன் மோதல் போக்கைக் கையாண்டு அதை அடிபணியச் செய்தால் தன்னுடைய தலைமையை யாரும் அசைக்க முடியாது என மோடி கருதுகிறார்.

6.மரபுகளையும், கொலிஜியத்தின் பரிந்துரைகளை மீறியும், உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை தன் விருப்பம் போல் இந்திரா நியமிக்கச் செய்தார்.

இப்போது கொலிஜியம் முறையை மாற்றி நீதித் துறை நியமன ஆணையம் ஒன்றை மோடி கொண்டுவந்துள்ளார். இதன் மூலம் நீதித் துறையின் சுதந்திரம் பறிக்கப்படும் அபாயம் உள்ளது.

7.நாடாளுமன்றம் கூடாத காலத்தில் முக்கிய காரணங்களுக்காகக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்படும். ஆனால், அவை பிறகு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும். இந்திரா காலத்தில் இந்த மரபு அறவே புறந்தள்ளப்பட்டு பல அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன.

அதைபோல, இப்போது மோடியும் நிலம கையகப்படுத்துவதற்கான அவசரச் சட்டத்தை மூன்றாம் முறையாகக் கொண்டு வந்திருக்கிறார். தொடர்ந்து பல அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்படுகின்றன. இது நாடாளுமன்ற மரபுக்கே எதிரானது என்பது குறித்து மோடி கவலைப்படவில்லை.

காங்கிரஸ் - பா.ஜ.க., பல மாநிலக் கட்சிகளில் உட்கட்சி சனநாயகம் அழிக்கப்பட்டுவிட்ட நிலையில், நாட்டில் மட்டும் ஜனநாயகம் தழைக்குமா?

இங்கே ஜனநாயகம் பதவி நாயகமாகவும், பண நாயகமாகவும் மாறிக் கொண்டிருக்கிறது. அரசு அமைப்பது, கவிழ்ப்பது ஆகிய எல்லாமும் பணநாயகத்தின் உதவியில்லாமல் நடைபெறாது என்ற போக்கு சர்வாதிகாரத்தில்தான் போய் முடியும்.

ஊழல் அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஆகியோர் துணையோடு நாட்டின் இயற்கை வளங்களை உள்நாட்டுத் தொழில் நிறுவனங்களும், வெளிநாட்டு நிறுவனங்களும் தங்கு தடையில்லாமல் சூறையாடுகின்றன. இதை எதிர்த்துப் போராடும் மக்கள் ஈவு இரக்கமில்லாமல் ஒடுக்கப்படுகிறார்கள்.

இந்தியாவில் உள்ள 120 கோடி மக்களில் ஏறத்தாழ 44 கோடி பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் என ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக ஆய்வு தெரிவிக்கிறது.

மகாராட்டிரம், உத்தரப் பிரதேசம், தமிழகம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த காவல் துறையின் மூத்த அதிகாரிகள் அளித்துள்ள அறிக்கை ஒன்றில் பாலியல் பலாத்காரம், குடும்ப வன்முறைகள், வரதட்சிணை தொடர்பான மரணங்கள், கௌரவக் கொலைகள், பாலியல் துன்புறுத்தல்கள், பெண்களுக்கு எதிரான குற்றங்கள், குழந்தைகள் மீதான வன்முறைகள், சிறார் திருமணம், கொத்தடிமைகளாகப் பயன்படுத்துவது, பாலியல் தொழிலுக்காகப் பெண்களையும் சிறார்களையும் கடத்துவது ஆகியவை மிகப் பெரிய சமூகப் பிரச்சினைகளாக நீடிக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளனர்.

சுருக்கமாகக் கூறினால், அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை நாட்டில் நிலவுகிறது. இதை மனதில் கொண்டுதான் மூத்தத் தலைவரான அத்வானி அபாயச் சங்கை ஊதியிருக்கிறார்.

-பழ.நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய்மையான ஐக்கிய தேசியக்கட்சி ரணிலுக்கு வேட்புரிமை வழங்காது

## தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு) —

**ஐக்கிய தேசியக் கட்சியினர் தமது கட்சியை தூய்மையான கட்சியென அழைத்து கொள்வதற்கு அமைய மத்திய வங்கி முறி பத்திர மோசடி உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கும் ரணில் விககிரமசிங்க உட்பட அந்த கட்சியின் தலைவர்களுக்கு வேட்புரிமை வழங்க மாட்டாது என தான் நம்புவதாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.**



பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் பிரதான அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிர்வரும் ஓகஸ்ட் 17 ஆம் திகதி பொதுத் தேர்தலில் சிறந்த பதிலை வழங்குவார்கள் என நம்புகிறோம்.

அத்துடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு பின்னர், தற்போதைய அரசாங்கத்தின் மத்திய வங்கியின் முறி பத்திர மோசடி உட்பட சகல ஊழல் மோசடிகளுக்கு எதிராகவும் நாங்கள் சட்டத்தை கடுமையாக செயற்படுத்துவோம் என்ற உறுதிமொழியை மக்களுக்கு வழங்குகிறோம்.

நியாயமான சமூகத்திற்கான தேசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மாதுலுவாவே சோபித தேரர் உட்பட பிக்குமாரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான கலைஞர்களும் கடந்த காலத்தில் நல்லாட்சி குறித்து கடுமையாக குரல் எழுப்பி வந்தனர்.

இவர்கள் கூறியது போல் தற்போது இருப்பது மிக சிறந்த ஐக்கிய தேசியக் கட்சி. 5 ஆயிரத்து 400 கோடிக்கும் மேலான மக்கள் பணத்தை கொள்ளையிட்டு, திறைசேரியை சுத்தம் செய்து, அது தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டியவர் என கோப் அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வேட்புரிமையை ஐக்கிய தேசியக் கட்சி வழங்காது என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அதேபோல், குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியுள்ள ஜோன் அமரதுங்க, பாலித ரங்கே பண்டார, ரவி கருணாநாயக்க, ஹரின் பெர்னாண்டோ, சஜித் பிரேமதாச ஆகியோருக்கு தூய்மையான ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்காது என எதிர்பார்க்கின்றோம் எனவும் மொஹமட் முஸம்மில் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சட்டவிரோத தேர்தல் பிரசார விளம்பரங்களை அகற்றும் அதிகாரம் உள்ளூர் மன்றங்களுக்கு

சட்டவிரோத தேர்தல் பிரசார விளம்பரங்களை அகற்றும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நகரம் அல்லது எல்லைக்கு உட்பட்ட பகுதியை சுத்தமாக வைத்துக் கொள்ளும் பொறுப்பு உள்ளூராட்சி மன்றங்களுக்குரியதாகும்.

உள்ளூராட்சி மன்றங்களில் போதியளவு ஆளணி வளம் காணப்படுவதனால் சட்டவிரோத தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அகற்றும் பொறுப்பு உள்ளூராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களத்திற்கு காணப்படும் அதிக வேலைப்பழு காரணமாக சட்டவிரோத சுவரொட்டிகளை அகற்றுவது சிரமமானது.

எனினும், சுவரொட்டிகள் அகற்றப்படுகின்றதா என்பதனை கண்காணிக்கும் பணிகளை பொலிஸ் திணைக்களமும் தேர்தல் திணைக்களமும் மேற்கொள்ளும் என குறித்த அதிகாரி கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத தேர்தல் பிர சாரங்களை அகற்றும் நடவடிக்கை எதிர்வரும் 13ஆம் திகதியின் பினனர் ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ-7)

# சிங்களவன் பிறந்த மண்ணில் அநாதையாகி உள்ளானாம்

## ஆதங்கப்படுகிறார் ஞானசார தேரர்

சிங்களவன் பிறந்த மண்ணில் அநாதையாகியுள்ளான் என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இப்போதேனும் நாம் அவர்களை எழுப்ப வேண்டும். ஆக்கிரமிப்பாளர்கள் நாட்டை ஆட்சி செய்து வருகின்றனர். அதிகார மோகம் காரணமாக ஆட்சியாளர் அதற்கு இடமளித்துள்ளார்.

றிசாத் பதியுதீன் கடந்த அரசாங்கத்திலும் அமைச்சர் இந்த அரசாங்கத்திலும் அமைச்சர். காலத்தை விரயமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.


ரவூப் ஹக்கீமின் நிலைமையும் அதுவே. சரியென்றால் ஹக்கீமை நாடு நடத்த வேண்டும்.

மகிந்தவின் வாக்குகளை உடைக்க நாம் வரவில்லை. நாம் யாருடைய வாக்குகளையும் சிதறடிக்க முயற்சிக்கவில்லை.

அரசியல்வாதிகளினால் நாட்டுக்கு உரிய சேவை ஆற்றப்படுவதில்லை.

நாட்டையும் இனத்தையும் மதத்தையும் பாதுகாக்க சிங்களவன் அனைவரும் ஒன்றிணைய வேணடும். சிங்கள உரிமையை நிச்சயமாக நாம் பாதுகாப்போம்.

எரான் விக்ரமரட்ன ஓர் கிறிஸ்தவ மதகுருவாகும், அவர் எவ்வாறு நாடாளுமன்றம் சென்றார் என்பது



பற்றி யாரும் கேள்வி எழுப்புவதில்லை என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கிருலப்பனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நல்ல பெயர் வாங்குவது எப்படி?

''நான் நல்ல காரியம் எல்லாம் செய்திருக்கிறேன். இருந்தாலும் எனக்கு ஒரு பெரிய குறை'' என்று ஒருவர் கூறினார்.

"என்ன குறை?" என்று கேட்டார் இன்னொருவர்.

''என்னை யாருமே நல்லவன் என்று சொல்வதில்லை! அதுதான் குறை''என்றார்.

நல்ல செயல்களை செய்பவன் என்பது வேறு! நல்லவன் என்று பெயர் எடுப்பது வேறு.

நல்ல பெயர் வாங்குவது என்பது இலகுவான காரியமா? அதுசரி எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்குவது எப்பாடி?

இதற்கு ஒரு அனுபவசாலி சில வழிகளைக் கூறுகிறார். முதலாவது வழி மற்றவர்களை உண்மையாகவே பாராட்டிப் பழக வேண்டும்.

சிலபேர் எப்படியென்றால் ஏனையவர்கள் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்தால் அவர்களைப் பாராட்டுவதற்கு பதிலாக அவர்கள் மேலே பொறாமைப்பட ஆரம்பித்து விடுகிறார்கள். அல்லது அவர்களிடம் பேசுவதை நிறுத்திக் கொள்கிறார்கள்.

அதனால் நமது பெயரும் கெட்டுப் போகிறது. இரண்டாவது வழி பிறர் மீது நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

உங்களுக்குப் பக்கத்தில் இருப்பவருக்கு தலைவலி. உங்களிடம் மாத்திரை இருக்கிறது. அப்படி என்றால் அதில் ஒன்றை அவருக்கு கொடுத்து உதவுவது. அந்தத் தலைவலி நீங்கள் பக்கத்தில் இருப்பதால் வந்திருக்கலாம்.

ஏனையவர்கள் ஒரு தவறு செய்து விட்டார்கள் என்றால் அதை மறைமுகமாகச் சுட்டிக்காட்ட வேண்டும்.

"ஐயையோ! இப்படி செய்து விட்டீர்களே"என்று ஆரம்பிக்கக் கூடாது. தவறு என்பது திருத்திக் கொள்ளக் கூடியதுதான் என்பதை அவருக்கு உணர்த்தி ஊக்கம் அளிக்க வேண்டும்.

''பரவாயில்லை, இனிமேல் இதுமாதிரி நடக்காமல் பார்த்துக் கொள்ளவும்!'' என்று சொல்ல வேண்டும். மூன்றாவது வழி உங்களுக்கு எதிரில் இருப்பவர்களை அலட்சியப்படுத்தக் கூடாது! அவரும் முக்கியமானவர்தான் என்பதை அவரே உணர்கிற அளவுக்கு நீங்கள் நடக்கவேண்டும்.

அவருடைய ஆலோசனைகளையும் அடிக்கடி கேளுங்கள். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று கேளுங்கள்.

அவரைக் கதைப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள். நீங்கள் மட்டுமே பேசிக் கொண்டு இருக்க வேண்டாம். அவர் பேசுவதைப் பொறுமையாகக் கேளுங்கள். அப்போதுதான் உங்கள்மேல் அவருக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் வரும்.

ஒரு கடுமையான வாக்குவாதம் செய்து கொண்டு இருக்கிறீர்கள். அதுமாதிரி வாக்குவாதங்களில் இருந்து சிறந்த பலன் பெறவேண்டுமென்றால் அதில் இருந்து ஒதுங்குவதுதான் சிறந்த வழியாகும்.

நான்காவது விடயம் என்னவொன்றால் ஏனையவர்களை மகிழ்ச்சி அடைய வைப்பதன்மூலம் நாங்களும் மகிழ்ச்சியடைவது.

சிலருக்கு அடுத்தவர்களை அதிர்ச்சியடைய வைத்து வேடிக்கைப் பார்ப்பது என்பது ஒரு தனியான சுவாரஸ்யம். அது மிகவும் பிழையான விடயம்.

நல்ல பெயர் வாங்குவது எப்படி என்பதை ஒரு வெளிநாட்டு நிபுணர் இவ்வாறு தன் கருத்து மூலம் தெரிவிக்கின்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி பலன்கள்



**குருவின் பார்வை கிடைக்கிறது!**
**குழப்பங்கள் எல்லாம் நீங்குகிறது!**
**சாமர்த்தியமாகப் பேசி எதையும் சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற கும்ப இராசி நேயர்களே!**

வந்துவிட்டது குருப்பெயர்ச்சி! எந்த நாளையும் இனிய நாளாக மாற்றும் பார்வை பலத்தைப் பெற்ற குருபகவான் இப்பொழுது உங்கள் ராசியைப் பார்க்கப் போகிறார். அப்புறமென்ன, ஆதாயம் அதிகரிக்கும், அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். உடல் ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும் நேரமிது.

இதுவரை உங்கள் ராசிக்கு ஆறாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், ஆனி 20 முதல் ஏழாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். தனலாபாதிபதியான குருபகவான் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது ஒரு வழிக்கு யோகம்தான் என்றாலும் 2016 ஜனவரி மாதத்தில் ராகு-கேது பெயர்ச்சியும் நடை பெறவிருக்கிறது.

உங்கள் ராசியில் கேதுவும், சப்தம ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரித்து சர்ப்ப தோஷ அமைப்பு உருவாகிறது. மேலும் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் சனி சிம்மத்தில் சஞ்சரிக்கும் ராகுவையும், குருவையும் பார்க்கப் போகிறார். எனவே, குரு பார்வையால் பலன் கிடைக்கும். அதே நேரத்தில் உங்களுக்கு சில குறுக்கீடுகளும் வந்து சேர்கின்றன. எனவே, அவற்றிலிருந்து விடுபட வார வழிபாடு, மாத வழிபாடு, சிறப்பு வழிபாடு என்று மூன்று விதமான வழிபாடுகளை மேற்கொளவது நல்லது.

## குருவின் பார்வை கிடைக்கிறது! குழப்பங்கள் எல்லாம் நீங்குகிறது!

**வேடிக்கையாகப் பேசுவது உங்கள் வாடிக்கை!**

பழைய சடங்கு சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்தாலும், சீர்த்திருத்தக் கொள்கைகளையும் சேர்த்துக் கொண்டு செயற படுவீர்கள். எதையும் ஊடுருவி ஆராய்ந்து பார்க்கும் தன்மை இருப்பதால் சந்தேகத்தால் பல சந்தர்ப்பங்களை நழுவ விட்டு விடுவீர்கள். நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக ஒரு சிலரை மட்டுமே வைத்துக் கொள்வீர்க்கள். பிடிவாத குணத்தால் பிரச்சினைகளை அதிகமாகச் சந்தித்தாலும் பிறரை உபசரிப்பதன் மூலம் உள்ளத்தில் இடம்பிடிப்பீர்கள். உங்களிடம் ஒப்படைத்த பொறுப்புகள் உடனடியாக முடித்துக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் உறுத்திக் கொண்டேயிருக்கும். இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு சிம்ம குரு எந்தெந்த வழிகளில் நன்மைகளை வழங்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்

**ஏழினில் குருதான் வந்தால்**
**எதிர்காலம் சிறப்பாய் மாறும்!**
**வாழ்விலே வசந்தம் சேரும்!**
**வருமானம் திருப்தியாகும்**
**சூழ்ந்திடும் பகை விலகும்!**
**தொடுத்திடும் மாலை சேரும்!**
**கோள்களில் குருவை நீங்கள்**
**கும்பிட்டால் பலன் கிடைக்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது எதிர்காலம் சிறப்படைய எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். கல்யாண வாய்ப்புகள் கைகூடவில்லையே என்ற கவலை அகலும். காரசாரமாகப் பேசிய உறவினர்கள் இனி பிரச்சினை வேண்டாம் என்று ஒத்துப் போக முன்வருவர்.

நிலம், வீடு வாங்கும் முயற்சிக்கு அந்நிய இனத்தவர்கள் ஆதரவுக்கரம் நீட்டுவர். குடும்பத்தினர்களின் ஒற்றுமை பலப்படும். கூடுதல் லாபம் தொழிலில் கிடைக்க நாடி வரும் நண்பர்கள் நல் ஆதரவு கொடுப்பர். பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். இடையிடையே நலக் குறைவு தலைதூக்கினாலும் தெய்வ வழிபாட்டின் மூலம் உடல் நலம் சீராகும். கூட்டாளிகள் உங்களோடு வந்திணைந்து பணிபுரிவர். பொதுவாக ஏழில் குருவின் சஞ்சாரம் நடைபெறும் பொழுது வாழ்வில் நல்ல மாற்றங்கள் பலவும் வந்து சேரும்.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

இதுவரை 6 இல் சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து 1, 3, 11 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். அதன் பார்வை பதியும் அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன.

**ஜென்மத்தை குருதான் பார்த்தால்**
**சிரமங்கள் அகன்று ஓடும்!**
**மூன்றினை குருதான் பார்த்தால்**
**முயற்சியில் வெற்றி கிட்டும்!**
**பதினொன்றைக் குருதான் பார்த்தால்**
**பணத்தேவை பூர்த்தியாகும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. எனவே குருவின் பார்வை பதியும் இடங்களான 1, 3, 11 ஆகிய இடங்களால் என்னென்ன காரியங்கள் எல்லாம் நடைபெற வேண்டுமோ அந்தக் காரியங்கள் எல்லாம் அடுக்கடுக்காக நடைபெறப் போகின்றன. கடந்த காலத்தில் ஏற்பட்ட கவலைகள் இனி மாறும்.

தொட்டதைத் துலங்க வைப்பவர் குரு பகவான்தான். எனவே, மூடிக் கிடந்த தொழிலுக்கு இனித் திறப்பு விழா செய்வீர்கள். வேலையை விடலாமா, வி.ஆர்.எஸ். வாங்கிக் கொள்ளலாமா, என்று சிந்தித்தவர்கள் இனி, ஆனி 21 முதல் நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ளப் போகிறீர்கள். யோகபலம் பெற்ற நாளில் தஞ்சை மாவட்டம் ஆலங்குடி, மதுரை அருகில் உள்ள குரு வித்துறை, திட்டை தட்சிணாமூர்த்தி போன்ற தலங்களுக்கு எல்லாம் வாய்ப்பிருக்கும் பொழுது சென்று வழிபட்டு வந்தால் வரன்களும் வாயிற் கதவைத் தட்டும், வருமானமும் பெருகும்.

குருவின் பார்வை சகோதர ஸ்தானத்தில் பதிவதால் ஒத்துவராத உடன்பிறப்புகள் ஒத்துவருவர். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். குருவின் பார்வை 11 ஆம் இடத்தில் பதிவதால் லாபஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே வருமானம் பெருக வழிபிறக்கும். வாழ்க்கைத் துணையின் சம்பாத்யமும் கூடும். வாரிசுகளின் சம்பாத்தி யமும் வந்து சேரும். அந்நிய தேசத்தில் இருந்து அனுகூலச் செய்திகள் வந்தடையும். எந்த முடிவும் சுயஜாதகத்தை ஆராய்ந்து எடுத்துக்கொள்ளுங்கள்.

**கேது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். துணையாக இருப்பவர்கள் தோள்கொடுத்து உதவுவர். குடும்ப முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர். வீண் பிரச்சினைகள் அகலும். வருமானம் போதுமானதாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஏற்பட்ட தொல்லை அகலும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டுவந்து சேர்ப்பர்.





**சுக்ர சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

வசதிகள் பெருகும். வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த புது முயற்சிக்கு பெண்வழி ஒத்துழைப்பு கிடைக்கும். பிரபலஸ்தர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருப்பர். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். சொத்துக்களில் ஒருபகுதியைக் கொடுத்துவிட்டு முத்தான தொழிலுக்கு மூலதனமாக்கிக் கொள்வீர்கள். தங்கம், வெள்ளி தடையின்றி வந்து சேரும். மங்கல விழாக்கள் மனையில் நடப்பதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**சூரிய சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

இககாலத்தில் நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். மனதிலுள்ள நினைத்திருந்த காரியத்தை மறுநிமிடமே செய்து முடிப்பீர்கள். அரசியல் ஈடுபாடுகொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும். வியாபாரப் போட்டிகள் அகலும். தனித்து இயங்க முற்படுவீர்கள்.



**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குருவின் வக்ர காலத்தில் கூடுதல் கவனம் தேவை. கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற இயலாது. பிரச்சினைகள் அதிகரிக்கும். உறவினர்கள் உதட்டில் ஒன்றும், உள்ளத்தில் ஒன்றும் வைத்துப் பேசுவர். உத்தியோகத்தில் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு குறையலாம். தென்முகக் கடவுள் வழிபாடு உங்களுக்கு நன்மைகளை வரவழைத்துக் கொடுக்கலாம்.

**செல்வ வளம்தரும் சிறப்பு வழிபாடு!**

சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கோவிலுக்குச் சென்று இறைவனையும், இறைவியையும் வழிபட்டு இன்பங்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

**கும்ப ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்தக் குருப்பெயர்ச்சி உங்களுக்கு நல்ல வாய்ப்புகளை அள்ளி வழங்கப் போகிறது. மாலை கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு மாலை கிடைக்கும். வேலை கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு வேலை கிடைக்கும். மழலை கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு மழலை கிடைக்கும். கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும்.

உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கலாமா என்ற சிந்தனை குடும்பத்தினர்களுக்கு உருவாகும். இடம், பூமி சேர்க்கை ஏற்படும். இல்லம் கட்டிக் குடியேறும் ஆசை ஒருசிலருக்கு நிறைவேறும். தங்கம், வெள்ளி, வைரம் நகைகளை தக்க விதத்தில் வாங்கிச் சேர்க்க வாய்ப்புகள் தேடி வரும். தாய்வழி ஆதரவும், தனவரவும் உண்டு.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும், பன்மடங்கு சம்பளமும் அதிகமாக வந்து சேரும். நினைத்தது நிறைவேற குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பிரதோஷ காலத்தில் நந்தியை வழிபாடு செய்யுங்கள். ராகு-கேது பெயர்ச்சி காலத்தில் சர்ப்ப கிரக வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

(நாளை மீனம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை பெரியார் அணைக்கு புலிகளால் ஆபத்து இல்லை

## - ஜெயலலிதா




(சென்னை)

**முல்லைப்பெரியார் அணைக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்தில்லை என்று ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசாங்கம் இந்திய உயர்நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.**

இந்த அணையின் மீது தீவிர வாதிகளின் தாக்குதல் இடம்பெறலாம் என்று கடந்த வாரம் தமிழக அரசாங்கம், தேசிய புலனாய்வு அறிக்கையை ஆதாரம் காட்டி சத்தியக்கடதாசி ஒன்றை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது.

அதில் விடுதலைப்புலிகளின் பெயரையும் புலனாய்வுத்துறை இணைந்திருந்தது.

எனினும் இதனை தமிழகத்தின் அரசியல் கட்சிகள் கடுமையாக விமர்சித்திருந்தன.

இந்தநிலையில் நேற்று முன்தினம் தமிழக அரசாங்கம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில், விடுதலைப் புலிகளின் பெயரை அகற்றியுள்ளது. (இ-7)

## இசையமைப்பாளர் எம்.எஸ்.வியின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடம்



மெல்லிசை மன்னர் இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமான நிலையில் உள்ளது.

எம்.எஸ்.விஸ்வநாதன் மூச்சுத்திணறல் காரணமாக அடையாறில் உள்ள தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். இரு தினங்களுக்கு முன்பு அவரது உடல்நிலை மோசம் அடைந்தது.

நினைவுகளை இழந்தார். இதனால் அவசர பிரிவில் வைத்து வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர்.

ஆனாலும் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. தொடர்ந்து கவலைக்கிடமாகவே இருக்கிறார். உயிரை காப்பாற்ற வைத்தியர் குழுவினர் போராடுகிறார்கள். திரையுலகினரும், உறவினர்களும் வைத்தியசாலைக்கு நேரில் சென்று உடல்நலம் விசாரித்து வருகின்றனர்.

எம்.எஸ்.விஸ்வநாதன் பட உலகின் சகாப்தமாக போற்றப்படுகிறார். தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் 1200இற்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்து இருக்கிறார்.

மறைந்த எம்.ஜி.ஆர். சிவாஜி கணேசனின் நிறைய படங்கள் இவரது இசையிலேயே வந்தன. மெல்லிசையால் அரை நூற்றாண்டுக்கும் மேலாக தமிழக இதயங்களை கட்டிப் போட்டு இருக்கிறார்.

இன்றைய இளைய தலைமுறையினரை அவரது பாடல்கள் ஈர்த்து வைத்துள்ளன.

சிறுவயதில் வறுமையில் வாடிய அவர் எதிர்நீச்சல் போட்டே புகழின் உச்சியை அடைந்தார். எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு 87 வயது ஆகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஏழு கண்டங்களின் மலைச்சிகரங்களில் ஏறி சாதனை படைத்த அரியானா சகோதரிகள்



அரியானாவைச் சேர்ந்த சகோதரிகள் டஷி மற்றும் நுங்ஷி மாலிக் இருவரும் சேர்ந்து உலகின் ஏழு கண்டங்களிலும் உள்ள ஏழு உயர்ந்த சிகரங்களில் ஒன்றாக ஏறி சாதனை படைத்துள்ளனர். உலகின் முதல் இரட்டை சகோதரிகளாக இவர்கள் இச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

இவர்கள் இந்த சாதனையை நிகழ்த்தியதற்காக சாகசக்காரர்களுக்கான கிராண்ட்ஸ்லாம் என்கிற விருதினை வென்றிருக்கின் றனர்.

ஏழு கண்டங்களின் மலைச்சிகரங்கள் மற்றும் வட துருவத்தி லிருந்து தென் துருவத்திற்கு பனிச் சறுக்கு மற்றும் மூன்று துருவ சவால் என பல்வேறு தேசிய மற்றும் மண்டல சாதனைகளை செய்துள்ளனர்.

இவர்களது 21-வது வயதில் உலகின் மிகப்பெரிய சிகரத்தை அடைந்தனர். மேலும், கின்ன ஸின் 60-வது பதிப்பில் இவர்கள் இடம்பெற்றிருந்தனர். இவர்களை அரியானாவின் பெண் குழந்தை பாதுகாப்பு அமைப்பின்தூதராகநியமித்துள்ளனர்.

இந்த சகோதரிகளின் சாதனைகளை பற்றி மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறும்போது, பெண் சிசுக் கொலை மற்றும் கல்வியறிவின்மை உள்ள நம்நாட்டில் இளைய சமூகத்தின் முன் மாதிரியாக இவர்கள் விளங்கவேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த பெண்கள், ஆபிரிக்காவின் கிளிமாஞ்சாரோ மலைச்சிகரம், ஐரோப்பாவின் எல்பர்ஸ் மலைச் சிகரம், தென்னமெரிக்காவின் அகோன்காகுவா மலைச்சிகரம், ஓசியானாவின் கார்ஸ்டென் ஸ்ஸ் பிரமிட் மலைச்சிகரம், அலாஸ்கா வின் மெக்கின்லே மலைச்சிகரம் மற்றும் அண்டார்டிக்காவின் உயரமான வின்சன் மலைச்சிகரங்களில் ஏறி சாதனை படைத்துள்ளனர். (இ-7)

## இப்தார் விருந்து அளிக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி

(புதுடில்லி)

புனித ரம்ழான் மாதத்தை யொட்டி பிரதமர் நரேந்திர மோடி இப்தார் விருந்து அளிக்கிறார். இந்த இப்தார் விருந்து நிகழ்ச்சி காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் ரம்ழான் மாதத்தின் கடைசி வெள்ளிக் கிழமையான எதிர்வரும் 17ஆம் திகதி நடக்கிறது.

இதில், பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று இப்தார் விருந்து அளிக்கிறார். அதேநாளில் ஜம்முவில் நடைபெறும் முன்னாள் அமைச்சர் கிரிதரிலால் டோக்ராவின் 100 ஆவது பிறந்தநாள் விழாவிலும் பங்கேற்கிறார்.

கடந்த ஆண்டு ஸ்ரீநகரில் நடந்த தீபாவளி நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

ஜம்மு காஷ்மீரில் பலத்த மழை பெய்து 100 ஆண்டுகள் இல்லாதவகையில் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அதன்பிறகு அவர் தற்போது காஷ்மீர் செல்லவுள்ளார். (இ-7)

## மும்பையில் எலிக்காய்ச்சலால் ஒரேவாரத்தில் 12 பேர் மரணம்

மும்பையில் கடந்த ஒரே வாரத்தில் எலி காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 21 பேரில் 12 பேர் உயிரிழந்தனர்.

மும்பையில் கடந்த மாதம் கன மழை பெய்ததை தொடர்ந்து கடந்த சில வாரங்களாக எலி காய்ச்சல் தீவிரமாக பரவி வருகிறது.

மும்பையில் பல்வேறு நகராட்சி வைத்தியசாலைகளில் மொத்தம் 21 பேருக்கு இந்த நோய் இருப்பது கண்டறியப்பட்ட நிலையில், அவர்களுள் 12 வயது சிறுமி உள்ளிட்ட 12 பேர் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பலியாகினர்.

இவர்களில் பெரும்பாலானோர் மாலாத், மல்வானி, கந்தவிலி, போரிவாலி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவார். (இ-7)

## தாஷ்கண்டில் பிரதமர் நரேந்திரமோடி லால்பகதூர் சாஸ்திரிக்கு அஞ்சலி

பிரதமர் நரேந்திரமோடி மத்திய ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்று முன்தினம் அவர் உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஷ்கண்ட் சென்றார். அங்கு 1966-ம் ஆண்டு மாரடைப்பால் மரணம் அடைந்த இந்திய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரிக்கு, பிரதமர் மோடி அஞ்சலி செலுத்தினார்.

லால்பகதூர் சாஸ்திரியின் நினைவை போற்றி பாதுகாக்கும் உஸ்பெகிஸ்தான் மற்றும் தாஷ்கண்ட் மக்களுக்கு மோடி நன்றி தெரிவித்தார். இந்தியாவின் பெருமைக்குரிய மகனும் இந்திய மக்களால் பெரிதும் கவரப்பட்ட லால்பகதூர் சாஸ்திரி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய தகவலை, மோடி 'டுவிட்டர்' மூலம் வெளிப்படுத்தினார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை வெற்றியடைய செய்ய இணைந்து செயற்பட வேண்டும்

### ஜனாதிபதி அழைப்பு


பொறாமை, வெறுப்பு, கோபங்களை அழித்து தோழமையுடன் நாட்டை வெற்றியடைய செய்ய அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய இப்தார் விழாவில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் அனைத்து மதங்களுக்கும் இடையில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப ஒற்றுமை மற்றும் பரஸ்பர புரிந்துணர்வோடு செயற்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை நாட்டை கட்டியெழுப்ப இவ்வாறான மத நிகழ்வுகளில் அனைவரும் இணைந்து கொண்டாடுவது அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி உட்பட அமைச்சர், உறுப்பினர்கள் மற்றும் தூதுவர்கள், முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இஸ்லாமிய மதத்தலைவர்கள் கலந்து கொண்டதாக் ஜனாதிபதி ஊடக பிரிவு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)




# மகிந்த தரப்பை அதிரவைக்கும் ஜனாதிபதியின் நிபந்தனைகள்!

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களுடன் நேற்று முன்தினம் நடத்திய நீண்ட பேச்சுக்களை அடுத்து, வேட்பாளர் பட்டியலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்க முடிவு செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதற்காக பல நிபந்தனைகளையும் விதித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நியமனக் குழுவுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன விஜேராம மாவத்தையில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்தில் ஆலோசனை நடத்தியிருந்தார்.

இந்தக் கூட்டத்தில், ஐக்கிய மக்கள் சுத்ந்திர முன்னணியின் பொதுச்செயலர் சுசில் பிரேம ஜெயந்த, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் அநுர பிரியதர்சன யாப்பா, எஸ்.பி.திஸாநாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். அதற்கு முன்னதாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சித் தலைவர்களுடன் சுசில் பிரேம் ஜெயந்த ஆலோசனை நடத்தினார்.

அதேவேளை, மகிந்த ராஜபக்ஷவுக்கு வாய்ப்பு மறுக்கப்படலாம் என்ற நிலையில் பிரசன்ன ரணதுங்கவின் வீட்டில், மகிந்த ராஜபக்ஷ அணியினரும் கூடி ஆராய்ந்தனர். இதில் சுசில் பிரேம ஜெயந்தவும் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் அவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வாய்ப்பளிக்கும் முடிவில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, பல்வேறு தரப்பினருடன் நடத்திய ஆலோசனைகளை அடுத்து, சில நிபந்தனைகளுடன் மகிந்த ராஜபக்ஷவுக்கு போட்டியிட வாய்ப்பளிப்பதென மைத்திரிபால சிறிசேன முடிவு செய்துள்ளதாக நேற்று முன்தினம் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய, அம்பாந் தோட்டை மாவட்டத்திலேயே மகிந்த ராஜபக்ஷ போட்டியிட வேண்டும். அவரை பிரதமர் வேட்பாளராக நியமிக்க முடியாது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பரப்புரைக் குழுத் தலைவராகவோ அல்லது மாவட்டத்தின் தலைமை வேட்பாளராகவோ அறிவிக்க முடியாது.

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றினாலும் கூட மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிப்பதாக வாக்குறுதி அளிக்க முடியாது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்பத்துக்கமையவே பிரதமர் தெரிவு செய்யப்படுவார். என்றும் அவர் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிபந்தனைகளின் படி, பிரதமராக நியமிக்கப்படாவிடின் சாதாரணமான ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவே மகிந்த ராஜபக்ஷ இருக்க முடியும் என்றும், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, மகிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவர்களுக்கு போட்டியிட இடமளிப்பது குறித்தும், மைத்திரிபால சிறிசேன கடும் போக்கை வெளிப்படுத்தியுள்ளார்.

ஊழல் மோசடி மற்றும் குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுத்துள்ள சஜின்வாஸ் குணவர்த்தன, துமிந்த சில்வா, மேர்வின் சில்வா, பிரேமலால் ஜெயசேகர ஆகியோருடன், மகிந்தவுக்கு நெருக்கமான, ரோகித அபேகுணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, லக்ஸ்மன் வசந்த பெரேரா, மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோருக்கும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மகிந்த ஆதரவு மேல்மாகாணசபை உறுப்பினர் சமன்மல்லி சகலசூரியவுக்கும் வேட்பாளர் பட்டியலில் இடமளிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையே மகிந்த ராஜபக்ஷவுக்கு போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டால், தாமும் போட்டியிடுவேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தெரிவித்துள்ளார். சந்திரிகாவின் நிலைப்பாடு தெளிவானது. அவர் தேசியப்பட்டியலின் ஊடாக வரமாட்டார். அவர் தேர்தலில் போட்டியிட்டு, மக்களின் வாக்குகளுடன் நாடாளுமன்றம் வருவார் என்று அவரது பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவின் நிபந்தனைகளாலும், தமது ஆதரவாளர்கள் ஓரம்கட்டப்படும் நிலையிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வாய்ப்பு மறுக்கப்பட்டால், மகிந்த ராஜபக்ஷ தரப்பு தனித்துப் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.


இதற்கிடையே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேட்பாளர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைவரது பெயர்களையும், உன்னிப்பாக அவதானித்து, ஆலோசனை நடத்தியே அதற்கு அனுமதி அளிப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகர்களின் அறிமுக ஆவணம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

இலங்கைக்காக் நியமிக்கப்பட்டுள்ள புதிய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தமது அறிமுக ஆவணங்களை வழங்கியுள்ளனர். இது தொடர்பான நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஜப்பான் நாட்டின் தூதுவரும், கென்யா, கானா, சிங்கப்பூர் மற்றும் சீசெல்ஸ் அரசாங்கத்துக்கான உயர்ஸ்தானிகர்களும் இதில் கலந்து கொண்டுள்ளனர். அறிமுக ஆவணங்களை வழங்கியதன் பின்னர் புதிய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இதன் போது தமது நாட்டுக்கும், இலங்கைக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை விரிவாக்குவதற்கு புதிய





உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோர்கள் என தான் நம்புவதாக ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

## மீண்டும் அரசியலில் குமார் குணரத்னம்

தேர்தல் பிரசாரங்களில் முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரத்னம் ஈடுபடுவதற்கான அதிக சாத்தியம் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

இலங்கையில் இருந்து வெளியேறுமாறு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்ட போதிலும் குமார் குணரத்னம் இதுவரையில் அவுஸ்திரேலியா நோக்கி செல்லவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையில் அவர் மீண்டும் பிரபலமாக அரசியலில் இணைத்துக் கொள்வதற்கு முன்னிலை சோசலிசக் கட்சி முயற்சிப்பதாக தெரியவந்துள்ளதோடு, தற்போதைய தேர்தல் பரபரப்பேற்பட்டுள்ளதனால் குமார் குணரத்னம் இலங்கையில் இருப்பதற்கு அனுமதி கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

குமார் குணரத்னத்தை தேர்தல் பிரச்சாரத்திற்கு இணைத்து கொள்வதற்கான் எதிர்பார்ப்புள்ளதாகவும், இது தொடர்பிலான தரப்பினரிடம் கலந்துரையாடல் மேற்கொண்டு வருவதாகவும் முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜயகொட சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

குமார் குணரத்னம் இலங்கையில் தங்கியிருப்பதற்கு அனுமதி கிடைக்க வேண்டுமாயின் முதலில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திடம் கேட்க வேண்டியது அவசியம் எனவும், அவ்வாறு இல்லையேல் தனியாக தீர்மானம் மேற்கொள்வதற்கு அனுமதி இல்லை என பொது ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ விவகாரங்களுக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது அணியின் ஊடாக மாற்றத்தை ஏற்படுத்துவோம்

**அத்துரலிய ரத்ன தேரர் அழைப்பு**

**(கொழும்பு)**

**நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வ தற்கான மூன்றாவது அணி இன்று மக்களுக்கு தேவைப படுகின்றது. அந்த அணியை அமைத்து மாற்றத்தை கொண்டுவர நாம் தயார். இன,மத பேதமின்றி இந்த அணியில் அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்று தூய்மைக்கான நாளை அமைப்பின் தலைவர் அத்துரலியே ரத்ன தேரர் அழைப்பு விடுத்துள்ளார்.**

மகிந்த, ரணில்ல நம்பி மீண்டும் ஏமாற வேண்டாம் எனவும் அவர் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் இருந்து ஜாதிக ஹெல உறுமய வெளி யேறியதை அடுத்து தனிக்கூட்டணியை அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் ரத்ன தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாடு கடந்த காலங்களில் பல சிக்கலுக்கு முகம கொடுத்திருந்தது. கடந்த முப்பது ஆண்டுகாலமாக இந்த நாடு தவறான பாதையில் பயணித்தமைக்கு இலங்கையின் சிங்கள தலைமைகளும் பொறுப்புக் கூற வேண்டும்.

அவசியமான உரிமைகளை வடக்கு மக்களுக்கு அன்று பெற்றுக் கொடுத்திருந்தால் இவ்வாறான இழப்புகள் எவையும் இடம்பெற்றிருக்காது.

அதேபோல் தமிழ் தலைமைகளை சந்தேகக் கண்ணில் பார்க்கும் நிலைமையும் ஏற்பட்டிருக்காது. கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கையின் அரசியல் பாதை மிகவும் மோசமானதர்கவே அமைந்தது. நாட்டின் வளங்கள் கொள்ளையடிக்கப்பட்டது.

மதக்கலவரங்களை யும் இன முரண்பாடு களை யும் தோற்றுவிக்கும் வகை யில் அரசாங்கம் நடந்து கொண்டது. அபிவிருத்திகள் என்ற பெயரில் இலங்கையின் வளங்களை வெளி நாடுகளுக்கு விற்றனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் மூலம் நாட்டில் நல்ல மாற்றம் ஒன்றை மக்கள் எதிர்பார்த்தனர். ஆட்சிமாற்றம் ஒன்று அவசியமானதாக இருந்தது. ஆனால் ஏற்பட்டுள்ள மாற்றமும் நாட்டுக்கு நல்லதாக அமையவில்லை. கூட்டு அரசாங்கம் தனது நூறுநாட்களை சரியாக கையாண்டாலும் அதன்பின்னர் இழுத்தடிப்புகள், ஏமாற்று நடவடிக்கைகளுமே அதிகரித்து விட்டன.

ஆகவே மக்கள் இந்த அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இல்லாத நிலைமைக்கு போய்விட்டனர்.

பாராளுமன்றத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் புதிய அரசாங்கத்தில் மக்களின் அபிலாசைகளை வென்று கொடுப்பதிலும் பிரதமர் ரணில தூவறிவிட்டார்.

கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எவற்றைச் செய்தாரோ அதையே இந்த அரசாங்கமும் செய்துள்ளது. ஆகவே மக்களுக்கு இப்போது நல்லதொரு, நம்பிக்கையான மாற்றம் அவசியமானதாகும்.

ஆனால் அந்த மாற்றத்தை இந்த இரண்டு பிரதான கட்சிகளினாலும் மேற்கொள்ள முடியாது என்பதை எம்மால் குறிப்பிட முடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி தனக்கான பிரதமர் வேட்பாளார் யார் என்பதை தெரிவு செய்வதில் தொடர்ச்சியாக சிக்கல்களை எதிர்கொள்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை வீழ்த்த அணி திரண்ட கூட்டணிக்கு இப்போது மீண்டும் மகிந்தவின் ஆதரவு தேவைப்படுகின்றது.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியும் தமது அதிகாரத்தை தக்கவைக்கும் நோக்கத்தில் செயற்படுகின்றது. வெளிநாட்டு உடன்படிக்கைகள், நாட்டை குழப்பும் சில செயல்களை கடந்த காலத்தில் செய்தனர். இவற்றை மறுக்க முடியாது.

இரண்டு கட்சிகளின் அரசாங்கத்திலும் மக்களுக்கான உரிமைகள் முழுமையாக கிடைக்கப் பெறவில்லை. வழமையான மோசடிக்கார கூட்டணியை மீண்டும் உருவாக்க நாம் அனுமதிக்கக் கூடாது.

ஆகவே மக்கள் இப்போது மூன்றாவது தலைமைத்துவத்தை நாடவேண்டியுள்ளது.

மக்களையும் நாட்டையும் சரியான பாதையில் கொண்டு செல்லும் பலமான சக்தியை அமைக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

ஆகவே நாம் இம்முறை தேர்தலில் மூன்றாவது சக்தியாக களமிறங்க தயாராக உள்ளோம். அதற்கான சகல நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளோம்.

எமது தேர்தல் திட்டம் தொடர்பில் நாம் கலந்துரையாடி வருகின்றோம். அதேபோல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் எமது நிலைப்பாட்டை முன்வைத்துள்ளோம்.

எமது கூட்டணியில் இணைந்து கொள்ள விரும்பும் அனைவரும் எம்முடன் கைகோர்க்க பகிரங்க அழைப்பு விடுக்கின்றோம்.

நாட்டை ஜனநாயகத்தின் பாதையில் கொண்டு செல்ல விரும்பும் அனைவரும் எம்முடன் கைகோர்க்கலாம். இதில் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பாகுபாடு இல்லை எனத் தெரிவித்தார். (இ-7)

# செல்ஃபி



துவாரகன் பருத்தித்துறை



தர்சன் மல்லாகம்

பி.கிருஷன், சாவகச்சேரி



சேகர், நெல்லியடி



ச.மிதுன், நாவாந்துறை





நிஷாந்தன், அரியாலை

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.எஸ்.ஐ.எஸ்.இயக்கத்தில் இணைந்த பிரபல கிக்பொக்சிங் சம்பியன் மரணம்

தாய்லாந்தை சேர்ந்தவர் வால்டிச் ஹாசி 2 முறை உலக கிக்பொக்ஸிங் சம்பியன் பட்டம் வென்றவர். இவர் ஜேர்மனியில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தில் சேருவதற்காக சிரியா சென்றார். சிரியாவில் அவர் மரணம் அடைந்து விட்டதாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

ஹாசி அல்பேனிய வம்சாவளியை சேர்ந்த ஒரு ஜேர் மன்காரர் ஆவார். இவர் கடந்த ஜனவரி மாதம் தனது மனைவி மற்றும் 2 பெண் குழந்தைகளை விட்டு விட்டு ஐஎஸ்ஐஎஸ் இயக்கத்தில் இணைந்து போரிட சிரியா சென்றார். இந்த நிலையில் ஹாசியின் குடும்பத்தினர் ஹாசி கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்டதாக தெரிவித்துள்ளதாக சுவிஸ் தொலைக் காட்சி ஒன்று தெரிவித்து உள்ளது. (இ-7)

## குவாரி தொழிலாளர்கள் 14பேர் சுட்டுப்படுகொலை



ஆபிரிக்க நாடான கென்யாவில், மந்தேரா என்ற நகரில் ஒரு குடியிருப்பில் குவாரி தொழிலாளர்கள் கடந்த திங்கட்கிழமை இரவு, படுத்து தூங்கிக்கொண்டிருந்தனர். அப்போது நள்ளிரவு கடந்த நிலையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தார்கள்.

இருப்பினும், கடந்த காலத்தில் இப்படிப்பட்ட தீவிரவாத செயல்களை, அங்கு ஆதிக்கம் செலுத்தி வருகிற அல்ஷபாப் தீவிரவாதிகளே நடத்தி வந்துள்ளனர்.

எனவே இந்த சம்பவத்தையும், அதே இயக்கத்தை சேர்ந்தவர்களே நடத்தி இருப்பார்கள் என யூகிக்கப் படுகிறது. கடந்த டிசெம்பர் மாதம், இதே பகுதியில் 36 குவாரி தொழிலாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த கொடூர சம்பவம் குறித்து அந்த நகர பொலிஸ் அதிகாரி அலெக்ஸ் கருத்து தெரிவிக்கையில்,

"சம்பவம் நடந்த பகுதி குவாரி தொழிலாளர்கள் ஏராளமாக வசித்து வருகிற பகுதி ஆகும். அவர்கள் அதிகாலை ஒரு மணிக்கு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். 14 பேர் இறந்திருக்கிறார்கள்" என தெரிவித்தார். (இ-7)




# இராணுவத்திற்கான செலவைக் குறைத்து குழந்தைகளின் கல்வியை ஊக்குவிப்போம்

## நோபல் பரிசு பெற்ற பாக். சிறுமி மலாலா தெரிவிப்பு

**சர்வதேச குழந்தைகளின் கல்வி செலவுகளுக்காக ஆண்டுக்கு சுமார் 39 பில்லியன் டொலர்கள் தேவைப்படும் நேரத்தில், சர்வதேச அளவில் இராணுவத்திற்கு 8 நாட்களில் செலவிடப்படும் தொகை யும் 39 பில்லியன் டொலர்கள்தான். இந்த தொகையை இராணுவத்திற்கு செலவிடுவதற்கு பதிலாக குழந்தைகளின் கல்விக்கு செலவிடலாம். 39 பில்லியன் என்பது பெரிய தொகையாக இருந்தாலும் உலக அளவில் உள்ள குழந்தைகளின் கல்விக்கு இது தேவைப்படும் என்று நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தான் சிறுமி மலாலா தெரிவித்துள்ளார்.**

நோர்வே தலைநகரான ஒஸ்லோவில் நேற்று முந்தினம் ஆரம்பித்துள்ள ஐக்கிய நாடுகளின் கல்வி உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட மலாலா, குழந்தைகள் கல்வி குறித்து பேசினார்.

அப்போது, மே மாதம் நடத்தப்பட்ட உலக கல்வி மன்றத்தில் 100 நாடுகள் வரை குழந்தைகளுக்கு இலவச கல்வி வழங்க முன்வந்தது. இதன்படி யுனெஸ்கோவின் கணக்குப்படி 12 ஆண்டுகள் இலவச கல்வி வழங்க வேண்டுமாயின் 39 பில்லியன் டொலர்கள் வரை செலவாகும் என்று தெரிவித்தனர்.

நிதர்சனமான உண்மை என்னவென்றால் உலகளவிலான குழந்தைகளுக்கு கல்வி வழங்க போதிய வருவாய் இருக்கிறது.

ஆனால் அதனை கல்விக்கு பயன்படுத்தாமல் வெவ்வேறு விடயங்களில் பயன்படுத்தி வருகின்றனர். இராணுவத்திற்கு செலவு செய்வதை 8 நாட்கள் நிறுத்தினாலே, 39 பில்லியன் கிடைத்துவிடும். இதன் மூலமாக சுமார் 12 வருடங்கள் வரை இலவசமாக கல்வி வழங்க முடியும்.

இந்த நூற்றாண்டின் தலைவர்கள் ஆயுதங்களில் முதலீடு செய்வதை விடுத்து கல்வியில், புத்தகங்களில் முதலீடு செய்ய முன் வர வேண்டும். இதோடு நிறுத்தக் கூடாது. தொடர்ந்து போராடிக் கொண்டேயிருக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் பாடசாலை செல்லும் வரை போராடிக் கொண்டேயிருக்க வேண்டும்.

உலகத்தில் உள்ள தலைவர்களிடத்தில் கல்வி குறித்த இந்த தகவல் போய் சேராத நிலையில், என்னுடைய 18 ஆவது பிறந்த நாளை வருகிற ஜூலை 12 ஆம் திகதியன்று எனக்கு பரிசுகள் கொடுப்பதற்கு பதிலாக, உலக தலைவர்களுக்கு கல்வி குறித்த இந்த செய்தியை கொண்டு சேர்க்கும் வகையில், உங்களுக்கு பிடித்த 'புத்தகத்தை கையில் இருப்பது போல் படமெடுத்து Books Not Bullets என்ற ஹாஸ் டேக்குடன் பதிவு செய்யுங்கள். மேலும் மாற்றத்திற்கான முக்கிய ஆயுதம் கல்வி என்பதை புரிய வையுங்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஈராக்கில் 111 சிறுவர்கள் கடத்தல்; ஐ.எஸ்.தீவிரவாதிகள் அட்டூழியம்

சிரியா மற்றும் ஈராக் நாடுகளில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். ஈராக்கில் பல முக்கிய பகுதிகளை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் ஈராக் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 111 சிறுவர்களை கடத்தி வடக்கு நகரமான மொசூல் பகுதிக்கு கொண்டு சென்றுள்ளனர்.



இது குறித்து ஈராக் குர்திஸ்தான் ஜனநாயக கட்சியின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், கடத்தப்பட்ட சிறுவர்கள் அனைவரும் 10 முதல் 15 வயதுக்கு உட்பட்டவர்கள், அவர்கள் அனைவரையும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத பயிற்சி மையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

தீவிரவாதிகளின் நாச வேலைகளுக்கு அவர்கள் பயன்படுத்தப்படுவார்கள் என்று தெரிவித்தார். சிறுவர்கள் கடத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த 78 பெரியவர்களும் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# நேருக்கு நேர் மோதி விமானங்கள் விபத்து



அமெரிக்காவின் தென் கரோலினாவில் போர் விமானமும் சிறிய ரக விமானமும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

தென்கரோலினாவில் உள்ள வடக்கு சார்லெஸ்டன் என்ற இடத்தில் தான் இக்கோரச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அமெரிக்காவின் சா விமானப் படை தளத்தில் இருந்து போர்விமானி மேஜர் ஆரோன் ஜான்சன் எப் 16 ரக போர் விமானத்தில் நேற்று முன் தினம் வழக்கம்போல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்.


வடக்கு சார்லெஸ்டன் என்ற இடத்தில் பறந்து கொண்டிருந்தபோது எதிரே வந்த சி-150 என்ற சிறிய ரக விமானம் ஒன்று போர் விமானத்தின் மீது மோதும்படியாக வந்தது. சுதாரித்துக்கொண்ட போர் விமானி ஜான்சன் பரசூட்டை பயன்படுத்தி விமானத்தில் இருந்து வெளியேறினார்.

இதனால் இரு விமானங்களும் நடுவானில் ஒன்றுடன் ஒன்று மோதி வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில் சிறிய ரக விமானத்தில் பயணித்த இருவர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர். விபத்து குறித்து சா விமானப்படை தளத்தின் கர்னல் ஜோஸ்ட் கூறுகையில்,

"எல்லா சூழலிலும் பறக்கக்கூடிய பயிற்சியை எங்கள் விமானிகள் பெற்றுள்ளனர். விபத்து நிகழ்வதற்கு முன்பு வரை விமானி ஜான்சன் விமான கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பில்தான் இருந்தார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார். விபத்து குறித்து உயர் விசாரணை நடத்த விமானத்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# மாலியில் அல் - கயீதாவின் தலைவரை பிரான்ஸ் இராணுவம் சுட்டுக்கொன்றது



மாலியில் அல் - கயீதாவின் முக்கிய தலைவர் ஒருவரை தாங்கள் கொன்று விட்டதாக பிரான்ஸ் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

பிணைக் கைதிகளை விடுவிப்பதற்காக ஆறு மாதங்களுக்கு முன்பாக இவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

மொஹம்மட் அல் அக் வடோசெனே-ஜ என்ற அந்த அல் - கயீதா நபரை கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று, பிரான்சின் விஷேட இராணுவ அணி வட மாலியில் உள்ள மலைப் பிராந்தியத்தில் தாக்கிக் கொன்றது.

இந்த நடவடிக்கையின் போது மேலும் இரண்டு தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டனர். மாலியிலிருக்கும் தீவிரவாதிகள் தலைநகர் பமா கோவை பிடித்துவிடுவதைத் தடுப்பதற்காக 2013 ஜனவரியில் அந்நாட்டிற்கு பிரான்ஸ் தனது இராணுவத்தை அனுப்பியது.

2011 ஆம் ஆண்டில் பிரான்ஸைச் சேர்ந்த இருவரை இவர் பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருந்ததாக கூறப்படுகிறது. அந்தப் பணயக் கைதிகளில் ஒருவர், பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மொஹம்மட் அல் அக் வடோசெனேயும் மேலும் சில தீவிரவாதிகளும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதை அடுத்து, கடத்தி வைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப் பட்டனர்.

மாலி முன்பு பிரான்ஸின் குடியேற்ற நாடாக இருந்தது. அங்கு தங்கமும் பருத்தியும் பெரிய அளவில் கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடுத்து விட்ட அம்பு; சொல்லி விட்ட வார்த்தை திரும்ப வராது.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தேசிய பட்டியலின் மூலம் மூத்த தலைவர்களுக்கு வாய்ப்பு

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எதிர்ப்பு



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களான ஜி.எல்.பீரிஸ், சுசில் பிரேமஜயந்த, டலஸ் அழகப்பெரும மற்றும் அனுர பிரியதர்சன யாப்பா போன்றோர் இத்தேர்தலில் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு செல்வது தொடர்பில் ஆலோசித்து வரும் நிலையிலேயே, இவர்கள் இருவரும் இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் புலமையாளர்களும், நிபுணர்களும் மட்டுமே தேசியப் பட்டியில் இடம்பெற வேண்டும் என மைத்திரிபால சிறிசேனவும், சந்திரிகா குமாரதுங்கவும் வலியுறுத்தியுள்ளனர்.

இதனால் அதிர்ச்சியடைந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தரப்பினர், இது அரசியல் உள்நோக்கம் கொண்டது என குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆயினும், இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள இவர்கள் இருவரும், புலமையாளர்களும் நிபுணர்களும் நாடாளுமன்றத்துக்கு வரவேண்டும் என்பதற்காகவே தேசியப் பட்டியல் ஆசனங்கள் உருவாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.(எ-1)

## வாசுதேவ நாணயக்காரவில் ஏதோ பிரச்சினை இருக்கிறது!

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ தெரியாது என்பது நம் தமிழ்ப் பழமொழி.

புற்றுக்களில் பாம்பு இருக்குமென்று அனுமானிக்கலாமேயன்றி, இந்தப் புற்றில் இந்தப் பாம்புதான் இருக்கும் என்று அடித்துக் கூறமுடியாது. இது போன்றுதான் அரசியலும்.

அரசியல் கட்சிகளில் யார் நல்லவர்;யார் மக்களை ஏமாற்றுபவர் என்பதைக் கண்டறிவது கடினம். அந்த ளவிற்கு அவர்களின் நடிப்பு உச்சமாக இருக்கும்.

இந்த வகையில் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் அண்மைக்காலப் போக்குகள், அவரின் செயற்பாடுகள் அவர் மீது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

ஒருகாலத்தில் தமிழ் மக்கள் வாசுதேவ நாணயக்கார தொடர்பில் நன்மதிப்புக் கொண்டிருந்தனர்.

அவரும் தமிழர்கள் விவகாரத்தில் நியாயமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் கூட்டுக்குள் சென்ற பின் அவரின் அரசியல் செயற் பாடுகள் நியாயத்துவம் அற்றதாக இருப்பதைக் காண முடியும்.

மகிந்த ராஜபக்ஷவோடு இணங்கிப் போனால்தான் தனக்கு ஆலோசகர் பதவி, அமைச்சர் பதவி கிடைக்கும் என்ற அடிப்படையில் வாசுதேவ நாணயக்கார வாலாட்டுகிறார் என்று கருதிக் கொண் டால்,

மகிந்த ராஜபக்ஷ பதவியிழந்த பின்னரும் அவரை அரசியலுக்குள் கொண்டு வருவதில் வாசுதேவ நாணயக்கார அதீதமான முயற்சி செய்வது அவர் தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

அதாவது வாசுதேவ நாணயக்கார, மிகப் பெரியதொரு தவறை, பிழையை விட்டுள்ளார். அதனை மகிந்த ராஜபக்ஷ அறிந்து வைத்துள்ளார்.

எனவே தான் விட்ட தவறை மறைக்க வேண்டும் என்பதற்காக மகிந்த ராஜபக்ஷவுக்காக வாசுதேவ கடுமையாகப் பாடுபட வேண்டியுள்ளது என்று எண்ணத் தோன்றுகிறது.

பலமான அரசியல் தலைவர்கள், பௌத்த பிக்குகள், நாட்டின் மீது அக்கறை கொண்ட தேசிய பொது அமைப்புக்கள் மகிந்த ராஜபக்ஷ அரசியலுக்கு வருவதை கடுமையாக எதிர்க்கும்போது,

வாசுதேவ நாணயக்கார, மகிந்தவுக்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுப்பதில் கங்கணம் கட்டி நிற்கிறார்.

அதுமட்டுமன்றி மகிந்தவின் அரசியல் பிரவேசத்திற்காக பொய்யான பிரசாரங்களை –தவறான அரசியல் தகவல்களை வெளிப்படுத்தி மக்களை திசை திருப்புவதிலும் அவரின் நரி வேலை தொடர்கிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் மகிந்த போட்டியிடுவதற்கு சுசில் பிரேமஜயந்த அனுமதி அளித்துவிட்டார் என்பதை மட்டும் தெரிவிக்காமல், கூட்டமைப்பின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அனுமதித்து விட்டார் என்பது போன்ற போலிப் பிரசாரங்களை வாசுதேவ நாணயக்கார செய்து வருவது பொதுமக்களை ஏமாற்றும் போக்குடையது.

பதவிக்காக–பணத்திற்காக உண்மைகளை பொய்யாக்க நினைப்பது மிகப் பெரும் தவறு.

அதிலும் ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேன மீது, சிறுபான்மை மக்களிடம் அவநம்பிக்கையை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு வாசுதேவ நாணயக்கார மேற்போந்த பிரசாரங்களை முன்னெடுப்பது அவ்வளவு நல்லதல்ல.

இவ்வாறான அவரின் செயற்பாடுகள் வாசுதேவ முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முறையாக மாட்டுப்பட்டுள்ளார் என்ற கருத்தியலையே ஏற்படுத்தும்.

எனவே ஒரு நல்ல மனிதர் என்றிருந்த வாசுதேவ தனது சுயலாபத்திற்காக எதுவும் செய்யலாம் என நினைத்து செயற்படுவது இந்த நாட்டின் எதிர்கால அமைதிக்கு ஆபத்தாக அமையும் என்பதை உணர வேண்டும்.

## யோகப் பயிற்சி

வாழும் கலை அமைப்பினால் நடைபெறும் யோகா பயிற்சி எதிர்வரும் 11ம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி 17ம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் மாலை 5.30 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையில் நடைபெறும்.

இவ் யோகா பயிற்சிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் கலந்து கொள்ள முடியும்.

இவ் யோகாசனப் பயிற்சி ஆசிரியராக பெங்களூர் வாழுங்கலை ஆசிரியர் டி.சாய் ராம் அவர்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

## அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பகுதியில் பிளாஸ்டிக் மீள்சுழற்சி தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். குடாநாட்டில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்தும் பொருட்டு அமைக்கப்படவுள்ள கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர ஆணையாளர் வடமாகாண விவசாய அமைச்சர், சூழல் பாதுகாப்பு அதிகார சபைப் பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## அனுமதி அட்டை வழங்கல்

2015இல் கொக்குவில் இந்துக் கல்லூரி யிலிருந்து க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு 1ம்,2ம் தடவை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டை எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. மாணவர்கள்பாடசாலைச்சீருடை யுடனும் தேசிய அடையாள அட்டையுடனும் பெற்றோருடனும் வருகை தருமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (இ-3)

## போட்டி முடிவுகள்

இருபாலை கலை, பண்பாட்டுப் பேரவையின் கலாசார விழாவை முன்னிட்டு அண்மையில் நடத்தப்பட்ட கிராமியப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**கோலம் போடுதல்**
செ.சுஜாதா, சுபிதா, சூ.சசிகலா

**கிடுகு பின்னுதல்**
பா.நாகேஸ்வரி, த.ரஞ்சினிதேவி, இ.சசிலாதேவி

**தேங்காய் துருவுதல்**
ர.பமல்டா, செ.சுஜாதா, ஜே.யோகேஸ்வரி

**மாலை கட்டுதல்**
யோ.ராஜகலா, ஜெ.ஜெனுசியா, செ.சுஜாதா

**முட்டி உடைத்தல்**
சு.விஜயகுமாரி (இ-3)

## மகிந்தவை அனுமதிக்கக் கூடாது

### தாதி உத்தியோகத்தர்கள் வலியுறுத்தல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக் கூடாது என இலங்கை தாதி உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிகளை மஹிந்த ராஜபக்ச வகித்துள்ளார் என சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

மீண்டும் நாடாளுமன்ற உறுப்பிராக மஹிந்த முயற்சிக்கின்றார். மஹிந்தவின் மனநிலையை பூர்த்தி செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடமளிக்கக் கூடாது.

ஜனவரி மாதம் 8ம் திகதி மக்கள் வழங்கிய ஆணைக்கு ஜனாதிபதி துரோகம் இழைக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

மஹிந்த மீண்டும் அதிகாரத்திற்கு வருவதனை எதிர்க்கும் வகையில் ஊடக சந்திப்பொன்று நேற்று மருதானையில் நடைபெற்றது.

“மக்கள் ஆணையை காட்டிக் கொடுக்காதே, மஹிந்தவிற்கு மீள இடமளிக்காதே” என்ற தொனிப்பொருளில் இந்த மாநாடு நடைபெற்றது.

இந்த ஊடகவியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது சமன் ரத்னபிரிய மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

## சத்திய தரிசனம்



### உள்ளம் குளிர வழி

❖ காலம் மிக முக்கியமானது. ஒவ்வொரு நாளும் அந்தந்த பணியை அதற்குரிய நேரத்தில் செய்து முடிக்க வேண்டும்.

❖ குளிர்ச்சி மிக்க இடத்தில் உடல் மட்டுமே குளிர்ச்சி அடையும். நேர்மையால் மட்டுமே உள்ளம் குளிர்ச்சி பெறும்.

❖ வெறும் பேச்சால் பயனில்லை. செயல் மூலமாக மற்றவருக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

❖ மனிதன் பிறருக்குப் பாவம் செய்ய அஞ்ச வேண்டும். அதுவே உலகத்துக்கு தொண்டு செய்ததற்குச் சமம்.

❖ முயற்சி செய்வது மனிதனின் கையில், ஆனால் வெற்றி, தோல்வி கடவுளின் கையில் இருக்கிறது.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### வீட்டில் சுவாமி கும்பிடும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்ன?

வெள்ளி, செவ்வாய்கிழமைகளில் விளக்கைச் சுத்தமாகக் கழுவி புதுத்திரியிட்டு விளக்கு ஏற்றவேண்டும். அதுபோல் விளக்கையும் பூஜைக்கு அடிக்கும் மணியையும் வெறும் தரையில் வைக்காமல் ஏதாவது பலகை போன்று விரிப்பு வைத்து அதன்மேல் வைத்தல்வேண்டும்.

பூக்களை முகர்ந்துவிட்டு சுவாமிப்படங்களுக்குப் போடக்கூடாது. வீட்டில் சுவாமி கும்பிடும்போது பாடல்கள், மந்திரங்களை ஒலிக்கச் செய்யலாம் அல்லது அமைதியாகக் கும்பிடவேண்டும். அதைவிடுத்து ரிவி, ரேடியோ போன்றவற்றில் சினிமாப்பாடல், நாடகம் போன்றவைகளையோ ஒலிக்கச் செய்தல் கூடாது.

காரணம் பூஜை நேரத்தில் அமங்கலமான ஓசையோ வார்த்தைகளோ ஒலிக்குமானால் அதன் அதிர்வலைகள் இல்லத்தின் உள்ளே உண்டாகி அபத்தமான நிகழ்வுகளையோ, பாதிப்புக்களையோ ஏற்படுத்திவிட வாய்ப்புக்கள் உண்டு. அதேசமயம் மனமும் ஒரு நிலைப்படாது. அதேசமயம் சுவாமிக்கு வெறும் தீபம் தூபங்கள் மட்டுமன்றி நைவேத்தியமாக சிறிது கற்கண்டாவது வைத்து நீர்விளாவிடவேண்டும். நல்லதைச் செய்ய நல்லதே நடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம் யாழ்.பல்கலை இறுதிப்போட்டிக்குத் தகுதி



வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 10ஆவது ஆண்டாக நடத்திவரும் 50 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட துடுப் பாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி சிறி காமாட்சி அணியை 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

பூவா தலையா நிகழ்வில் வெற்றி பெற்ற சிறிகாமாட்சி அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 34.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

சுஜன்-36, தீபன்-14, அரவிந் தன்-11, யாதவன்-19 ஓட்டங்களைப் பெற்றனர். விதுஸ்-03, தரணி-01, வைகுண்டன்-04, குருகுலசூரியர்-01, டிக்ஸன்-01 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பலகலைக்கழக அணி 19.3 ஓவர்களில் 2 இலக்குகளை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது. குருகுல சூரியர்-46, ஜெயக்குமார்-24 ஓட்டங்களைப் பெற்றனர். சுஜன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

யாழ்.ஜொனியன்ஸ்- ஓல்ட் கோல்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெறும் காலிறுதிப்போட்டியில் வெற்றிபெறும் அணி பற்றீசியன்ஸ் அணியுடன் அரையிறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும்.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணி இறுதிப்போட்டியில் கலந்து கொள்ளும். மேற்படி போட்டியில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு யாழ்.பல்கலைக்கழக அணி 7.89 புள்ளிகளையும் சிறி காமாட்சி அணி 2 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன.

இப்போட்டிக்கு துஸ்யந்தனும் தவநேசனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். போட்டி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. (க)

# கொலின்ஸ் வி.கழக இன்றைய உதைபந்து



கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திவந்த Kings of Jaffna கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் லீக் சுற்றுக்கான ஆட்டங்கள் மிக பிரமாண்டமான மின்னொளியில் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதல் நாள் ஆட்டங்களாக இரவு 7 மணிக்கு டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும் இரவு 8 மணிக்கு மெலிஞ்சி முனை இருதயராஜா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (க)

## முல்லைத்தீவு மாவட்டத்திற்கிடையிலான

# வங்கியாளர் வெற்றிக்கிண்ணம் செலான் வங்கி சம்பியன்

முல்லைத்தீவு மாவட்டங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் செலான் வங்கி சம்பியனாகியது.


முல்லைத்தீவு மாவட்ட வங்கிகளுக்கு இடையே வருடம் தோறும் இடம்பெறும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இதில் இறுதி போட்டியில் சம்பத் வங்கியினை வீழ்த்தி செலான் வங்கி வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது.

தொடரின் நாயகனாக செலான வங்கியைச் சேர்ந்த மா.ஹரிப்பிரிவீன் தெரிவு செய்யப்பட்டார். (க)



# கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுவிழா கரைச்சி பிரதேச செயலகம் முதலிடம்












கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு விழாவில் கரைச்சி பிரதேச விளையாட்டுக்கழகங்கள் முதலாமிடத்தினை பெற்றுக்கொண்டன.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு விழா முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை பூநகரி பிரதேச செயலர் ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினராக [illegible] அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக வட மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எம்.ஆர்.ராஜா ரணசிங்க கலந்து கொண்டார்.

கரைச்சி பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்கள் 141 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், பூநகரி பிரதேச செயலக பிரிவு 45 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக அணி 41 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், கண்டாவளை பிரதேச செயலக பிரிவு அணி 28 புள்ளிகளைப் பெற்று 4 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (க-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்டில் ஜோ ரூட் சதம் அடித்து கைகொடுக்க இங்கிலாந்து அணி சரிவிலிருந்து மீண்டது.

# ஜோ ரூட் சதம் ஆஷஸ் டெஸ்ட் தொடர் இங்கிலாந்து ஆதிக்கம்

இங்கிலாந்து வந்துள்ள அவுஸ்திரேலிய அணி, 5 போட்டிகள் கொண்ட வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி கார்டிப் நகரில் நேற்று ஆரம்பமாகியது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி தலைவர் அலெஸ்டர் குக், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இங்கிலாந்து அணிக்கு அடம் லித், கப்டன் அலெஸ்டர் குக் ஜோடி சுமாரான ஆரம்பம் தந்தது. ஹேசல்வுட் பந்தில் லித் (6) அவுட்டானார். நாதன் லியான் 'சுழலில்' குக் (20) சிக்கினார். அடுத்து வந்த இயான் பெல் (1), மிட்சல் ஸ்டார்க் 'வேகத்தில்' வெளியேற, இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுக்கு 43 ஓட்டங்கள் எடுத்து திணறியது.

பின் இணைந்த கேரி பேலன்ஸ், ஜோ ரூட் ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. அவுஸ்திரேலிய பந்துவீச்சை எளிதாக சமாளித்த இவர்கள் விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டனர்.

ஸ்டார்க் வீசிய 17வது ஓவரில் ஜோ ரூட் 2 பவுண்டரி அடித்தார்.



மறுமுனையில் நிதானமாக விளையாடிய பேலன்ஸ், ஸ்டார்க் பந்தை பவுண்டரிக்கு விரட்டி 6வது அரைசதம் அடித்தார். நான்காவது விக்கெட்டுக்கு 153 ஓட்டங்கள் சேர்த்த போது ஹேசல்வுட் பந்தில் பேலன்ஸ் (61) 'அரங்கு' திரும்பினார்.

பொறுப்பாக ஆடிய ரூட், ஹேசல்வுட் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி, டெஸ்ட் அரங்கில் தனது 7வது சதத்தை பதிவு செய்தார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த பென் ஸ்டோக்ஸ், தன்பங்கிற்கு அரைசதம் அடித்தார். ஐந்தாவது விக்கெட்டுக்கு 84 ஓட்டங்கள் சேர்த்த போது ஸ்டார்க் பந்தில் ரூட் (134) அவுட்டானார். சிறிது நேரத்தில் ஸ்டோக்ஸ் (52) வெளியேறினார். அடுத்து வந்த ஜாஸ் பட்லர் (27) நிலைக்கவில்லை.



முதல் நாள் முடிவில் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்கு 343 ரன்கள் எடுத்திருந்தது. மொயீன் அலி (26), ஸ்டூவர்ட் பிராட் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர். அவுஸ்திரேலியா சார்பில் ஸ்டார்க், ஹேசல்வுட் தலா 3, நாதன் லியான் ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# விம்பிள்டன் டென்னிஸ் போட்டி அரையிறுதியில் பெடரர் -முர்ரே



விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் அரையிறுதியில் ரோஜர் பெடரருடன் பிரிட்டனின் அண்டி முர்ரே பலப்பரீட்சை நடத்த உள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் நேற்று காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதல் காலிறுதி ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், பிரான்சின் கில்லஸ் சைமனை வென்றார்.

அதன்பின்னர் நடந்த 2வது காலிறுதி ஆட்டத்தில் பிரிட்டன் வீரர் ஆண்டி முர்ரே, கனடாவின் வாசக் போஸ்பிசிலை எதிர்கொண்டார். விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் 6-4, 7-5, 6-4 என்ற செட்கணக்கில் முர்ரே வெற்றி பெற்றார். இதனால், நாளை நடைபெற உள்ள அரையிறுதி ஆட்டத்தில் பெடரர்-முர்ரே பலப்பரீட்சை நடத்த உள்ளனர். (க)

# கட்சியை பறிப்பதற்கு...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவிகளை வகிப்பதை எதிர்த்து வழக்கொன்றை தாக்கல் செய்து தடையுத்தரவு ஒன்றை பெற மஹிந்த கோஷ்டியினர் தயாராகி வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் தலைவர் பதவிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெற்றுக்கொண்டமை சட்ட விரோதமானது எனக் கூறியே நீதிமன்றத்தின் ஊடாக இந்த தடையுத்தரவை பெற மஹிந்த கோஷ்டி முனைப்புகளை மேற்கொண்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்றால், தானாகவே அவருக்கு கட்சியின் தலைவர் பதவி உரித்தாகும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பில் 12-2(4) பந்தியில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக தெரிவான பின்னர், மைத்திரிபால சிறிசேனவுக்கு சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவி கிடைத்தது.

எனினும் அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவில்லை என்ற தர்க்கத்தை மஹிந்த கோஷ்டியினர் முன்வைத்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படாத பட்சத்தில் கட்சியின் மாநாட்டின் மூலம் தலைவர் மற்றும் ஏனைய பதவிகளுக்கான நபர்களை தெரிவு செய்ய வேண்டும்.

மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக பொறுப்பேற்ற பின்னர், கட்சியின் செயலாளராக அனுர பிரியதர்ஷன யாப்பாவையும் பொருளாளராக எஸ்.பி.நாவின்னவையும் தேசிய அமைப்பாளரான சுசில் பிரேம ஜயந்தவையும் நியமித்தார்.

அத்துடன் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களாக நிமல் சிறிபால டி சில்வா, ஜோன் செனவிரட்ன ஆகியோர் நியமிக்கப்பட்டதுடன் உப தலைவர்களாக ராஜித சேனாரத்ன, எஸ்.பி. திஸாநாயக்க, பியசேன கமகே, எம்.கே.டி.எஸ். குணவர்தன, ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடுவதற்காக அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய மைத்திரிபால சிறிசேன, ராஜித சேனாரத்ன, துமிந்த திஸாநாயக்க, எம்.கே.டி.எஸ். குணவர்தன, வசந்த சேனாநாயக்க ஆகியோரை கட்சியின் அங்கத்துவத்தில் இருந்தும் அவர்கள் வகித்த பதவிகளில் இருந்து நீக்குவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செய லாளராக நியமிக்கப்பட்ட அனுர பிரியதர்ஷன யாப்பா அறிவித்தார். (எ-11)


# நீதிமன்றத்...

பட்டுள்ளார்.

வீடியோ ஆதாரங்களுடன் குறித்த சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளனர் என யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார். இதேவேளை, யாழ். நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்குத் தொடர்பாக நாளை 10ஆம் திகதி 37 சந்தேக நபர்கள் முற்படுத்தப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மரண அறிவித்தல்



## முருகன் மாணிக்கம்

உடுப்பிட்டி வீதி,தொண்டைமானாறை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மு.மாணிக்கம் நேற்று (08.07.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரதங்காளின் அன்புக் கணவரும், சந்திரசேகரம், சுசீலாதேவி, சிறி, தில்லைநாதன், ஜெகநாதன், சண்முகநாதன், கலாநிதி, கோகிலாதேவி, நந்தினிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வேலாயுதம், பத்மாவதி, சந்திரலிங்கம், நகுலன், சாவித்திரி, இரத்தினகுமாரி, திலகராணி, கேமலதா, ஜெயந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 12 மணியளவில் காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(1085) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப்பட்டியலில் இடம்...

இந்தநிலையில், தேசியப்பட்டியலில் இவர்களுக்கு இடமளிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

தேசியப் பட்டியலில் புலமையாளர்களும், நிபுணர்களும் மட்டுமே இடம்பெற வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளதால், மகிந்த ராஜபக்ஷ ஆதரவு அணியினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இது நாடாளுமன்றத்தில் மகிந்த ஆதரவு அணியினர் பலம்பெறுவதை தடுப்பதற்கான முயற்சி என்று அவர்கள் தரப்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும், தேசியப்பட்டியல் ஆசனங்கள் உருவாக்கப்பட்டதே, புலமையாளர்கள் நாடாளுமன்றத்துக்கு வரவேண்டும் என்பதறகாகத் தான் என்றும், இதில் அரசியல் உள்நோக்கம் இல்லை என்றும் மைத்திரி தரப்பினால் கூறப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

## ஜனநாயகக்...

அவரின் மனைவி அனோமா பொன்சேகா கம்பஹா மாவட்டத்திலும் போட்டியிடவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேரதலில் தம்முடன் இணைந்து போட்டியிடுமாறு சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுடன் பேச்சு நடத்தியிருந்தன.

இந்நிலையில், இது தொடர்பில் பரிசீலித்து வந்த ஜனநாயகக் கட்சி இத்தேர்தலில் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது. இதன்படி வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் பணிகளை இக்கட்சி தீவிரப்படுத்தியுள்ளது.

மாகாணசபைத் தேர்தல்களில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்கள் இத்தேர்தலில் போட்டியிடவுள்ளதுடன், புத்திஜீவிகள் மற்றும் கலைஞர்கள் ஆகியோருக்கும் போட்டியிட வாய்ப்பு வழங்கவுள்ளதாக இக்கட்சி தெரிவித்துள்ளது. (எ-11)

## 'ஜனாதிபதி...

பாரதூரமான அழுத்தமாக இருக்கலாம் என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இலங்கையின் அரசியலில் தொடர்ந்தும் தீர்மானகரமான தலையீடுகளை மேற்கொள்ளும் அயல் நாடான இந்தியா, மைத்திரிக்கு கொடுக்கப்பட்ட அழுத்தத்தின் பின்னணியில் இருக்கின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் தேசிய புலனாய்வு அமைப்பான றோ நேரடியான தலையீடுகளை மேற்கொண்டதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. இந்தியா அழுத்தங்களை கொடுப்பதற்கு கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

இந்தியாவுக்கு மகிந்தவுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது சுலபமானது. அத்துடன் சீனாவுடன் மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கும் தொடர்புகள் இலங்கைக்கு பொருளாதார ரீதியான நன்மையை ஏற்படுத்திக்கொடுக்கலாம் என தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த தீர்மானத்தை எடுத்திருக்கலாம் என உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

## வேட்பு மனு...

கட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு வந்தனர்.

இதனிடையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊவா பரணகம தொகுதியின் அதிகார சபைக் கூட்டத்தில் நேற்றுக் காலை பேசிய எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி குருணாகல் மாவட்டத்தில் போட்டியிடுவார் எனவும் அவர் எதிர்வரும் 10 ஆம் திகதி வேட்புமனுவில் கையெழுத்திடுவார் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் பொது தேர்தலில் போட்டியிடுவதற்காக தான் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி வேட்பு மனுவில் இன்றையதினம் கையொப்பமிடவுள்ளேன என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள செய்தி சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் குழு நேற்று கொழும்பு மகாவலிமையத்தில் வைத்து வேட்பு மனுவுக்காக கையொப்பமிடவிருந்தனர்.

வேட்புமனு பட்டியல் தயாரிக்கும் பணியின் இறுதி கட்டம் மற்றும் அதில் வேட்பாளர்களை உள்ளடக்குவதில் ஏற்பட்ட நிலைமை காரணமாக கையொப்பமிடப்படவில்லை.

அதற்கமைய இன்று வேட்பு மனுவில் கையொப்பமிடவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## நிபந்தனைகள்...

பட்டிருந்தன என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இருந்தபோதும், மைத்திரிபால சிறிசேன அப்படி எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லை என ஐ.ம.சு. முன்னணியின் பொதுச்செயலர் சுசில் பிரேம ஜயந்த நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் மற்றும் இன்னாள் ஜனாதிபதிகள் ஒரே அணியில் இணைந்து செயல்படுவார்கள் எனவும் சுசில் பிரேம ஜயந்த கூறினார்.

இதேவேளை அந்த நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ குருநாகல் தேர்தல் மாவட்டத்திலிருந்து போட்டியிடுவார் என எதிர்கட்சித்தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் துணைத் தலைவருமான நிமல் சிறிபால டி சில்வா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (எ-11)

## ஜனாதிபதி மைத்...

சிறிசேன உரிய முறையில் தலைமைப் பதவியை பெற்றுக்கொள்ளவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்ட ரீதியான முறையில் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்படவில்லை எனத் தெரிவித்து கட்சிகளுக்கு எதிராக தடையுத்தரவு பெற்றுக்கொள்ள மகிந்த ராஜபக்ஷ தரப்பு திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. உயர் நீதிமன்றில் இந்த தடையுத்தரவு பெற்றுக்கொள்ள முயற்சிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியாப்பு 12-2 (4) சரத்தின் அடிப்படையில் கட்சியை பிரதிநிதித்துவம் செய்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியாக தெரிவாகினால் அவரே சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியனவற்றின் தலைவராக செயற்படுவார் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள்சுதந்திரக்கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியனவற்றை பிரதிநிதித்துவம் செய்து போட்டியிடவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே சட்டத்திற்கு முரணான வகையில் அதிகாரத்தை கைப்பறறியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கட்சியின் சாரபில் ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்படாத நிலையில் பொதுச் சபைக் கூட்டத்தில் கட்சியின தல்லவர் உள்ளிட்ட பதவிகளல் மாற்றம் செய்யப்பட வேண்டும். (எ-11)

## ஒகஸ்ட் 3 இல்...

திகதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளதுடன் செப்டெம்பர் முதலாம் திகதி புதிய நாடாளுமன்றம் கூட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

### ஜனநாய...

பாளர் தெரிவு ஒறிரு தினங்களுக்குள் அறிவிக்கப்படும் என அவ அமைப்புக் கூறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்க தீர்மானித்திருந்த போதும் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளாத சந்தர்ப்பத்தில் தாம்சுயேட்சையாக போட்டியிடவுள்ளதாக அந்த அமைப்பு கூறியுள்ளது. (எ-1)


**B.A பேராதனை**

முதலாம் வருடம்

விரிவுரைகள் ஆரம்பம்

11.07.2015

சனிக்கிழமை 8 மணி

| | |
|---|---|
| மெய்யியல் | S.S மனோகரன் |
| தமிழ் | து.ஜீவானந்தன் |
| இந்து நாகரிகம் | சுரேஸ் |
| அரசியல் | அசோக் |
| புவியியல் | S.R பாலா |
| வரலாறு | பிரபல ஆசிரியர் |
| நாடகமும் அரங்கியலும் | அயூசன் |
| ICT | செல்ரன் |
| ஆங்கிலம் | |

(C-1511)

பட்டப்படிப்புக்கள் பிரிவு

**BEACON** யாழ்.நகர்

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...

SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions

STUDENT VISA - SPOUSE VISA - DEPENDANT VISA WORK VISA - SKILLED MIGRATION - VISIT VISA

கனடா Express Entry Visa — தொழில்வாய்ப்புடன் குடியுரிமை(PR) Degree/Diplomaவுடன்குறைந்தது ஒரு வருடதொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

Student VISA — UK, Australia, Spain New Zealand, Switzerland, Canada & Malaysia

ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள www.sikaram.lk

Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி.
யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்) (C-1516)
Call: 0777 32 4004
021 222 00 11

**பதவி வெற்றிடங்கள்**

O/L தகைமையுடையவரா? உங்களுக்கு ஒரு அரியவாய்ப்பு. நாடு முழுவதும் 65 கிளைகளைக் கொண்ட பிரபல்ய கம்பனியின் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய கிளைகளுக்கான பயிற்சியுடன் நிரந்தர வேலைவாய்ப்பு, பயிற்சியின் போது **Earn 12,000 - 15,000.** பின்னர் பதவிக்கேற்ப கொடுப்பனவு (குறைந்தது **45000/=**) (C-1514)

தொடர்பு கொள்க : 0774458134
GRANTON Intenational Pvt (Ltd) இல.225,3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**யாழ் - கொழும்பு பஸ் நடத்துனர் தேவை**

பருதித்துறையில் இருந்து கொழும்பு செல்லும் அரைச்சொகுசு பயணிகள் பேருந்திற்கு பின்வரும் தகுதிகள் உடைய நடத்துநர்கள் உடனடியாக தேவை

வயதெல்லை - 25 முதல் 35 வரை
எழுத்தறிவு
நன்னடத்தை
சம்பளம் - 25000-30000 (மாதம்)
சாப்பாட்டுக்கான செலவை நிர்வாகம் வழங்கும்

நேர்முகத்தேர்வு
காலம் - 10/07/2015 வெள்ளிக்கிழமை
நேரம் - காலை 11 மணி முதல் 1 மணி வரை
இடம் - V2 TRAVEL &TOURS
49, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

தொடர்புக்கு - 0778212345/0212221984 (C-151

**Dutch, Deutsch, French**



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.

✱ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.

✱ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.

✱ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவ தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.

✱ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
Tel: 0213216928, 0774842464 ,0212220393
அனைத்து புதிய வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன
(Gov. Reg.No: W/A 76795) (C-1512)

படித்த இளைஞர்களுக்கு வெளிநாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

**A/L படித்திருந்தால் போதும் கட்டார் (QATAR) இல் அலுவலக வேலைவாய்ப்பு**

| S/N | CATEGORY | NOS | SALARY (SR) | SALARY (SL) | தேவையான தகுதிகள் |
|---|---|---|---|---|---|
| 01 | ASST/LAB TECHNICIAN | 10 | 1200+100 | 45,600 | • A/L,ல் குறைந்தது ஒருபாடமாவது சித்தி • ஓரளவு English knowledge அவசியமானது. |
| 02 | ACCOUNTS ASSISTANT | 05 | 2500 | 95,000 | • Computerized Accounting Package. • Minimum 2 Years Work Experince. |
| 03 | DATA ENTRY OPERATOR | 05 | 1400 | 54000 | • A/Lஇல் குறைந்தது ஒருபாடமாவது சித்தி • ஓரளவு English knowledge அவசியமானது. • Basic Computer Knowledge. |

**மேலதிக சலுகைகள்**
இலவச தங்குமிடவசதி (ACCOMMODATION), வைத்திய வசதி (MEDICAL), மேல்திக வேலை நேரம் (OVER TIME),TRANSPORT .
ஒப்பந்தம் இரண்டு வருடம் (02)

**நேர்முகத்தேர்வு**
காலம் - 10/07/2015 (வெள்ளிக்கிழமை)
நேரம் - காலை 10 மணிமுதல்1மணி வரை
இடம் - V2 TRAVEL & TOURS
49, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு - 0768226237 / 0212221984



(C-1515)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.